
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 அக்டோபர் 29 - நவம்பர் 04 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 30




# கொள்கை, கருத்து வேறுபாடுகள் இயல்பு, ஆனால்

# பாஜகவை வீழ்த்த வேண்டியது காலத்தின் கட்டளை!

**இந்தியாவில் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து நாங்கள் விவாதித்து இருக்கிறோம்; முடிவுக்கும் வந்திருக்கிறோம்.**

## பொதுச் செயலாளர் டி.ராஜா பேட்டி




இந்திய நாட்டில் எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைத்திட வேண்டும். ஏற்கனவே பீகார் மாநிலத்தில் இத்தகைய கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டுவிட்டது. மற்ற மாநிலங்களிலும் இதே போன்ற கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

இதற்கான தேவையும், அவசியமும் இருக்கின்றன. பல்வேறு சாதிகளிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை பற்றிய துல்லியமான தரவுகள் கிடைத்தால் தான், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை மேலு உயர்த்தி விடுவதற்கு, ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் பொருத்தமான கொள்கைகள் வகுத்து திட்டங்களை செயல்படுத்த இயலும்.

காங்கிரசும் சரி, சமாஜ்வாதி கட்சியும் சரி, இந்தியா கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை ஏற்றுக்கொண்டு உள்ளன. அவர்களுக்கிடையில் முரண்பாடு ஏதேனும் இருந்தால் அவர்கள்தான் விளக்க வேண்டும்.

நாம் பழைய காலத்தை குழி தோண்டி எடுத்து விவாதிக்க வேண்டியதில்லை. நிகழ்காலத்துக்கு வர வேண்டும். நாம் இப்போது எதற்காகப் போராடுகிறோமோ, அந்த நோக்கம் எதிர்காலத்தில் நிறைவேறுவதைப் பார்க்க வேண்டும்.

பிஜேபியின் ஆட்சி இந்திய நாட்டுக்கு மிகப்பெரும் பேரழிவை கொண்டு வந்துள்ளது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

அரசியலமைப்பு சட்டம் தாக்குதலுக்குள்ளாகிறது. நாட்டில் இயல்பாக நிலவிய மதச்சார்பின்மையும், ஜனநாயகமும் சீரழிக்கப் படுகின்றன. சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடி மக்கள் மீதான அராஜகத் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. வேலையின்மை முன்னெப்போதையும் விட கூடுதலாகி இருக்கிறது. இந்திய ரூபாயின் மதிப்பு பாதாளத்துக்குள் விழுந்து கொண்டே இருக்கிறது.

நம் இந்திய நாடு,பரவலான பன்முகச் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது.

இந்தியா காப்பாற்றப்பட வேண்டும். நமது அரசியல் சாசனம் பாதுகாக்கப்பட வேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயக தன்மை நிலை நிறுத்தப்பட வேண்டும். இது காலத்தின் கட்டளை ஆகும்.

இந்த நேரத்தில் இடதுசாரிகளை உள்ளடக்கிய அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் முதன்மையான கடமை, பிஜேபியை எதிர்த்து போராடுவதும் அதனை ஆட்சியில் இருந்து கீழ் இறக்குவதுமே ஆகும்.

இந்தியா கூட்டணி இதைத்தான் நோக்கம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறது. கமல்நாத் காங்கிரஸின் மிக மூத்த தலைவர். அதேபோல அகிலேஷ் யாதவ் இந்தியாவின் இளம் தலைவர்களில் ஒருவர்; ஒரு பெரிய கட்சியை வழிநடத்துபவர்; முன்னாள் முதலமைச்சர். அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தால் அதை கண்ணியமான நாகரிகமான வழிகளில் பேசி வெளிப்படுத்த வேண்டும்.

நாம் செயற்கை அறிவு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அரசியல் செய்வதிலும், தனிமனிதர்களை, கட்சிகளை, அவற்றின் கொள்கைகளை விமர்சிப்பதிலும் ஒரு புதிய கலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டும்.

நாம் எல்லோரும் ஒரே கட்சியை சார்ந்தவர்கள் அல்ல. கருத்து வேறுபாடுகள் இருக்கும். ஒவ்வொரு அரசியல் கட்சியும், தனி மனிதர்களும், இந்தியாவின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி தமது சித்தாந்தத்தின் அடிப்படையில் வெவ்வேறு அணுகுமுறை கொண்டவர்களாக இருப்பார்கள். எனவே கருத்து வேறுபாடுகள் தோன்றுவது இயல்பு.

இப்போது நாம் ஒரு பொது நோக்கத்தை முன்னிட்டு ஒன்று சேர்ந்து இருக்கிறோம். அந்த நோக்கம் பழுதுபட்டு விடக்கூடாது. நமக்குள் பெரும் முரண்பாடு எழுந்து விட்டதோ என்று மற்றவர்கள் ஐயப்படுவதற்கு இடம் கொடுக்காத வகையில் நமது முரண்பாடுகளை பேசவும், தீர்வு காணவும் வேண்டும்.

எந்த இலக்கை எய்த வேண்டும் என்று நாம் பரஸ்பரம் ஒப்புக் கொண்டுள்ளோமோ, அதை நிறைவேற்றுவதற்கான ஒற்றுமையை கட்டி வளர்ப்பது நமது இன்றைய தேவை ஆகும்.

**ஏ.என்.ஐ. க்கு அளித்த பேட்டியிலிருந்து**

## பாலஸ்தீனம் அரேபியர்களுக்குச் சொந்தமானது!

*'பிரிட்டன் எப்படி பிரிட்டிஷ்காரனுக்குச் சொந்தமோ, பிரான்ஸ் எப்படி பிரெஞ்சுக்காரனுக்கு சொந்தமோ, அதுபோல, பாலஸ்தீனம் அரேபியர்களுக்குச் சொந்தமானது!'*

*என்று எழுதினார் மகாத்மா காந்தி.*

*அமெரிக்கா பிரிட்டனின் உதவியுடன் பாலஸ்தீனத்தின் மீது தங்களைத் திணிக்க முயற்சிக்கும் யூதர்களின் முயற்சி தவறானது என்றார் நேரு.*

*சுதந்திர இந்தியாவின் பிரதமர் நேரு தலைமையிலான முதல் அரசாங்கம் பாலஸ்தீனத்தைப் பிரிப்பதற்கான ஐநா தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தது.*

*வல்லாதிக்கக் கூட்டுறவால் மே 14, 1948 இல் இஸ்ரேல் உருவானபோதுகூட இந்தியா அதை ஒப்பவில்லை. துருக்கி போன்ற முஸ்லிம் நாடுகள் அங்கீகரித்தபிறகு அரபு நாடுகள் இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டபிறகு 1950இல்தான் நேரு தலைமையிலான இந்தியா இஸ்ரேலை அங்கீகரித்தது.*

*ஆனபோதும், அதனுடனான முழு அரச உறவை இந்தியா ஏற்படுத்திக்கொண்டுவிடவில்லை என்பதை அடிக்கோடிட்டுக்கொள்ளுங்கள்.*

*உலகமே இஸ்ரேலை அங்கீகரிக்க நேர்ந்தபோதும்கூட பாலஸ்தீனம் அதன் மக்களின் உரிமைக்கு மட்டுமே உரியது என்கிற நிலைதான் ஜவஹர்லால் நேருவினுடையது.*

*அது காந்தியின் திடமான எண்ணத்தின் பிரதிபலிப்பு. மூர்க்கர்கள் ஒன்று சேர்ந்தால் என்னாகும் என்று அறியாதவரா காந்தி? அதை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் பாருங்கள்!*

*"2008 முதல் காசா மற்றும் மேற்குக் கரையில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களைக் கொலை செய்திருக்கிறது அமெரிக்க பிரிட்டன் இஸ்ரேல் கூட்டணி. அதில் முப்பதாயிரம் பேர் குழந்தைகள்!"*

*இப்படி யுரோப்பியன் பார்லிமென்டில் கண்ணீர் வடித்திருக்கும் ஐரிஷ் எம்பி க்ளேர் டேலி Clare Daly*

*"இஸ்ரேல் நம் நண்பன் என்று திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள்! பாலஸ்தீனத்துக்கு யுரோப்பியன் யூனியன் செய்திருப்பதாகச் சொல்லும் நன்மைகளை ஒரேநாளில் தரைமட்டமாக்கியிருக்கிறது இஸ்ரேல்!"*

*என்று கொந்தளித்திருக்கிறார்!*




◆ குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட உள்ள பட்டியலின மக்களின் கோரிக்கை சாசனத்தில் 50 லட்சம் கையெழுத்து பெறும் இயக்கத்தை, கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும், நாகை நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.செல்வராசு முதல் கையெழுத்து இட்டு தொடங்கி வைக்கிறார். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், சங்கத்தின் மாநில துணைத் தலைவருமான க.மாரிமுத்து கையெழுத்திட்டார்.



◆ திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் சா.மு .நாசர் எம்.எல்.ஏ. முதல் கையெழுத்திட்டு தொடக்கி வைத்தார். தேர்தல் பணிக்குழு செயலாளர் ஆவடி இரா.அந்திரிதாஸ் , ஆவடி திமுக பகுதி செயலாளர் சன் பிரகாஷ், ராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமான பங்கேற்றனர்.

கட்சிக் கடிதம்

# ஜனநாயகம் காப்பதற்கான பெரும் போர்



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளேன். என்றாலும் அதிக ஓய்வு தேவை என மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள்.**

உங்களோடு சேர்ந்து களப்பணி ஆற்றுவதற்கான அந்த நாள் மிக விரைவில் வரவேண்டும் என உங்களைப் போலவே நானும் விரும்புகிறேன்.

பல வகைகளில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. பொதுவாக அறிவின் வேகத்தை விட உணர்ச்சிக்கு வேகம் அதிகம். ஆனால் தொன்மைமிக்க பாரம்பரியமும் பண்பாடும் கொண்ட தமிழ்நாடு, உணர்ச்சி வசப்படும் போது கூட அறிவையும் தன்னோடு சேர்த்து எடுத்துச் செல்கிறது.

அண்மையில் ஒரு உணவக உரிமையாளரின் பேட்டி காணொளியாக வந்தது. அவர் தனது உணவகத்தில் மிகப்பெரிய வெங்கடாஜலபதி படத்தை வைத்துள்ளார். கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர். அதே நேரத்தில் பெரியார் மீது தனக்கு பெரிய மரியாதை இருக்கிறது என்றும் கூறினார்.

அவரை தமது சாக்கடை வார்த்தைகளால் கிண்டலடித்துக் கொண்டிருக்கிறது கூலி பெறும் சங்கிகள் கூட்டம்.

அடையாறு ஆனந்த பவன் (ஏ2பி) என்னும் சங்கிலி உணவகத்தின் உரிமையாளர் பேட்டி வந்தது. பிராமணரல்லாத குலத்தில் பிறந்த அவர் உணவகத் தொழில் நடத்துவதற்கு பெரியார்தான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

உடனே அவரது கடைகளில் இந்துக்கள் யாரும் சாப்பிடச் செல்லக்கூடாது என சங்கிகளின் சமூக வலைத்தளங்கள் குண்டு மாரி பொழிந்தன. அதன் பின்பு அந்தக் கடைகளில் முன்பைவிட கூட்டம் அலை மோதுவதாகத் தெரிகிறது. இதுதான் தமிழ்நாட்டின் பதில்.

குஜராத்தில், நரேந்திர மோடி ஸ்டேடியத்தில், இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி. பாகிஸ்தான் விளையாட்டு வீரர்களிடம் ஜெய்ஸ்ரீராம் என கும்பல் கும்பலாக முழக்கமிட்டுள்ளனர்.

இந்த அநாகரிகத்தைக் கேட்டு வருந்திய மக்கள், "ஸாரி_பாகிஸ்தான்" என வலைத்தளங்களில் பதிவிட்டு, அது டரெண்டிங் ஆகியுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் இந்திய அணி தோல்வி அடைந்தபோது, வென்ற பாகிஸ்தான் அணியை தமிழ்நாட்டு ரசிகர்கள் எழுந்து நின்று கைதட்டி பாராட்டியதை குஜராத்தோடு ஒப்பிட்டு, இப்போது உலகமே நினைவு கூர்கிறது.

அண்மையில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் அணிகளிடையே சென்னையில் நடந்த கிரிக்கெட் போட்டியிலும் வென்ற ஆப்கானிஸ்தான் அணியை அதேபோல கைதட்டி பாராட்டியுள்ளனர்.

அது மட்டுமல்லாமல், 11 ஆண்டுகள் கழித்து சென்னை வந்த பாகிஸ்தான் அணியை அரங்கமே ஆரவாரம் செய்து வரவேற்றிருக்கிறார்கள். இது, தமிழகத்தின் வந்தாரை வரவேற்கும் குணம் மட்டுமல்ல; குஜராத் கூத்துக்கான எதிர்வினையும் ஆகும்.

ஒரு இளைஞர், "இவர்கள் பாகிஸ்தானை கேவலப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு,

ஜெய்ஸ்ரீராம் கோஷம் போட்டு, நம் நாட்டைத் தான் இழிபடுத்துகிறார்கள்" என்றார். இன்றும் தமிழ்நாடு மணக்கிறது.

ஒரு பக்கத்தில் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஆதரவான, இந்திய தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்களுக்கு நேர் எதிரான பொருளாதாரக் கொள்கையை பாஜக கையாளுகிறது.

சரிபாதிக்கு மேற்பட்ட மக்கள் வறுமை கோட்டுக்கு கீழும் முள்ளும் ஆக வாழ்க்கைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு உதவி கரம் நீட்டும் மானியம், நிதி உதவி உள்ளிட்டவற்றை ஒன்றிய அரசு தட்டிப் பறித்து விட்டது.

அதே நேரத்தில் 25 லட்சம் கோடி ரூபாய் வங்கிக் கடன்களை கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு ரத்து செய்கிறது. சலுகை பெற்றவர்கள் உலகப் பெரும் முதலாளிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சதவீதம் பேருக்கு இது, செல்வ வளம் மிக்க இந்தியா. 70% மக்களுக்கு இது வறுமையின் கூடாரம். நாட்டை இரு கூறாக்கி வைத்திருக்கிறது பாஜக ஆட்சி

மறுபக்கம், பிற்போக்கான, பத்தாம் பசலித்தனமான, வழக்கொழிந்த சாத்திரங்களை தூக்கிப் பிடிக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றிவிட்டு மனுநீதியை கொண்டு வர துடிக்கிறது.

"சூத்திரனுக்கொரு நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி,
சாத்திரம் சொல்லிடு மாயின்
அது சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"

என்பார் பாரதி.



எனவே பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான யுத்தத்தை ஒரு தளத்திலும், கருத்தியல் ரீதியான யுத்தத்தை மறுதளத்திலுமாக நடத்த வேண்டிய கடமை நம் முன்பு உள்ளது.

கருத்தியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாத போது அவதூறுகளையும் தனி நபர் மீதான அருவருக்கத்தக்க தாக்குதல்களையும் பிஜேபி நடத்திக் கொண்டிருக்கிறது.

பெரியாரைப் பற்றி அவர்கள் பேசாத கொச்சை வார்த்தைகளே கிடையாது. அண்ணாவைப் பற்றி ஒரு பொய் கதையைச் சொல்லி, மன்னிப்பு கேட்டு ஓடிவந்த கூட்டம் என்று மாநில பிஜேபி தலைவர் பேசியிருக்கிறார்.

அவர்களது ஞானத்தந்தை சாவர்க்கரில் தொடங்கி எஸ்.வி. சேகர், எச். ராஜா, மணியன் வரை நெற்றியில் தழும்பு விழும் அளவுக்கு மண்டியிட்டு மன்னிப்பு கேட்டு வந்த கதை நாடறியும்.

எங்கெல்லாம் கலகம் நடக்கிறதோ, அங்கெல்லாம் தான் பிஜேபி வெற்றி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் ஏதாவது கலகம் நடக்க வாய்ப்பு கிடைக்குமா? என்று தேடுகிறது. ஒவ்வொரு வாய்ப்பையும் கலகங்களாக மாற்றுவதற்கு விடாமல் முயற்சிக்கிறது.

கலகத்தில் ஈடுபடுவதற்கான ஆட்களையும் தன் மடிக்குள் சேர்த்து வைத்திருக்கிறது.

அதனால் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் சென்ற ஞாயிறு நடந்த ஒரு நிகழ்ச்சியில், "இந்திய ஜனநாயகத்தைக் காப்பதற்கான போரில் ஈடுபட்டுள்ளோம். இதில் வெற்றி பெறுவது, இந்தியாவின் எதிர்காலத்துக்கு இன்றியமையாதது ஆகும்.

பிஜேபியின் பாசிச ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவோம்" என்று மிகச் சரியாகக் கூறியுள்ளார்.

அதே நாளில் அதே நாளில் சேலத்தில் எடப்பாடி பழனிச்சாமி ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார். முஸ்லிம்களுக்காக போராடும் ஒரே கட்சி அஇஅதிமுக தான் என்று கூச்சமின்றி சொன்னாராம்.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் வாழ்வதையே கேள்விக்குறியாக்கும் குடிமக்கள் திருத்த சட்டம், மாநிலங்களவையில் அஇஅதிமுக ஆதரித்து வாக்களித்ததால் தான் நிறைவேறியது. எதிர்த்து இருந்தால் அந்த சட்டமே தோற்றுப் போய் இருக்கும்.

இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படும் ஒரே ஒரு முஸ்லிம் இருந்தால் எனக்கு காட்டுங்கள் என்று அப்போது வாய் நீளம் காட்டியவர் தானே இந்த எடப்பாடி?

காஷ்மீருக்கு தனித் தகுதி அளித்திருந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவை நீக்கி, அந்த மாநிலத்தை இரண்டாகக் துண்டாடுவதற்கு ஆதரித்து வாக்களித்ததுதானே அஇஅதிமுக?

முஸ்லிம்களின் மத கோட்பாடுகளின் மீது தாக்குதல் நடத்தி அச்சுறுத்தும் உள்நோக்கத்தோடு பிஜேபி கொண்டு வந்த முத்தலாக் திருத்தத்தை அஇஅதிமுக ஆதரித்ததா? இல்லையா?

மணிப்பூரின் தொடர்ச்சியாக பாஜக மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் அஇஅதிமுக வாக்களிக்கவில்லையா?

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற ஒற்றை ஆட்சி முறைமைக்கு அதிமுக வால் பிடிக்கவில்லையா?

ஜெயலலிதா அம்மையாரே எதிர்த்த புதிய கல்விக் கொள்கையையும், மின்சார உதய் திட்டத்தையும் பாஜகவுக்கு பயந்து கொண்டு ஆதரித்தது உண்மையா? இல்லையா?

அதிமுகவின் அடிநாதமான கொள்கைகள் அனைத்தையும், தன் சுயநலத்துக்காக விட்டுக் கொடுத்து கை கழுவியவர்தான் எடப்பாடி.

இவற்றையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று மனப்பால் குடிக்கிறார் பாவம்!

இந்திய ஜனநாயகத்தை காப்பதற்கான தேர்தல் களம் துவங்கிவிட்டது. ஆயத்தமாவோம்.

மீண்டும் சந்திப்போம்..

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# ‘வந்தே பாரத்’தும், தனியார்மயமும்



ம.இராதாகிருஷ்ணன்

**மோடியின் ஆரவார தம்பட்டமடிக்கும் திட்டமாக வந்தே பாரத் ரயில் போக்குவரத்து திட்டம் குறிப்பிடப்படுகிறது. மாடு முட்டி இந்த ரயில் சேதமடைந்தது, இந்த ரயில் பழுது பட்ட நிலையில் ஏற்கனவே உள்ள ரயில் எஞ்சின் கொண்டு வந்தே பாரத் ரயிலை இழுத்து வரப்படுகின்றது.**

இது போன்ற வந்தே பாரத் ரயில் போக்குவரத்து குறித்து நெட்டிசன்களால் உருவாக்கப்பட்ட நகைப்பு காட்சிகள் அடங்கிய வீடியோக்களும், படங்களும் சமூக ஊடகங்களிலும், ஊடகங்களிலும் தொடர்ந்து வலம் வந்த வண்ணம் உள்ளது.

இதைப் பற்றியெல்லாம் எந்த வித கூச்சநாச்சமும் இல்லாமல் மோடி தொடங்கி பாஜக மற்றும் பரிவாரங்கள் மோடியின் சாதனையாக புகழ்ந்து தள்ளிக்கொண்டுள்ளார்கள்.

இரண்டாவதாக வந்தே பாரத் விடுங்க, வராத பாரத் விடுங்க ஆனால் சாதாரண மக்கள் பயணிக்கும் ரயில்களை முறையாக விடுங்க என்று பெண்மணி ஒருவர் உழைக்கும் மக்களின் குரலாக ஒலித்த வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த குரலே வந்தே பாரத் சாதாரண மக்கள் பயணிக்கும் ரயில் அல்ல என்பதை காட்டுகிறது.

இருப்பினும் நாட்டில் அதிக வேகத்தில் இயங்கும் நவீன ரயிலாக வந்தே பாரத் திகழ்கிறது. 2018 இல் சென்னை ஐசிஎஃப் தொழிற்சாலையில்தான் இந்த ரயில்கள் உருவாக்கப்பட்டன. ட்ரெயின் 18 எனப்பட்ட இதனை பெயர் மாற்றியது பாஜக. இப்போது நாட்டின் பல பகுதிகளில் இயக்கப்படுகின்றன. வசதி வாய்ப்பு உள்ளோர் இதனை பயன்படுத்த விரும்புகின்றனர். இத்தகையோரிடம் வரவேற்பையும் பெற்றுள்ளது. இதையடுத்து வந்தே பாரத் ரயில்களை அதிகப்படுத்தவும், மெட்ரோ ரயில், படுக்கை வசதி கொண்ட ரயில், சரக்கு ரயில், புறநகர் ரயில் ஆகியவற்றிலும் வந்தே பாரத் ரயில்களை இயக்க ரயில்வே வாரியம் திட்டமிட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக முழுமையாக பொதுத்துறையில் உருவாக்கப்பட்ட வந்தே பாரத் ரயில் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முழுவதும் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நாட்டுக்கு பெரும் இழப்பு. பொதுத்துறை நிறுவனங்கள இந்தியாவின் ஆலயங்கள் என்றார் பண்டிட் நேரு. ஆனால் மோடிக்கோ இந்தியாவின் ஆலயங்கள் இடிந்து விழப் பிறந்தவை என்று பிரச்சாரம் செய்து மக்களை நம்ப வைப்பதே அவர்களின் கொள்கை. அதனால் தான் வந்தே பாரத்தும் தனியார்மயம்.

அந்த வகையில் படுக்கை வசதிகள் கொண்ட 200 வந்தே பாரத் ரயில் தொடர் உற்பத்தி, மற்றும் தனியார் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்த வகையில் ரஷ்யாவை சேர்ந்த டி.எம்.எச். என்ற தனியார் பன்னாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான மெட்ரோமாஷ் வேகன் நிறுவனம், இந்திய ரயில்வேயின் பொதுத்துறை நிறுவனமான ஆர்.வி.என். எல்.லுடன் இணைந்து செயல்படவுள்ளன. 120 ரயில் தொடர்களை பொதுத் துறை நிறுவனமான மஹாராஷ்ட்ரா மாநிலம் லாத்தூரில் உள்ள மஹாராஷ்ட்ரா ரயில் பெட்டி தொழிற்சாலையில் (MRCF)உற்பத்தி செய்ய உள்ளது. அதோடு புதுடெல்லி, மும்பை, பெங்களூரு, ஜோத்பூர், கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களில் உள்ள டெப்போக்களில் ரயில்களை 35 ஆண்டுகள் பராமரிப்பதற்கான ஒப்பந்தமும் சேர்த்தே வழங்கப்பட்டுள்ளது. ஆர்.வி.என். எல். என்பது இந்திய அரசின் ரயில்வே அமைச்சகத்தின் கீழ் உள்ள நவரத்னா நிறுவனம் ஆகும்

இத்தாலியை சேர்ந்த டிட்டாகர் ரயில் சிஸ்டம் என்ற பன்னாட்டு நிறுவனம் நமது பொதுத்துறை நிறுவனமான பி.எச்.இ.எல். உடன் இணைந்து 80 ரயில் பெட்டிகளை சென்னை இணைப்பு பெட்டி தொழிற்சாலையில் (ICF) உற்பத்தி செய்ய உள்ளது. டி.எம்.எச்., ஆர்.வி.என். எல். ஒரு வந்தே பாரத் ரயிலுக்கு ரூ.120 கோடியையும், இரண்டாவதாக டிட்டாகர் பிஎச்இஎல் ரூ.140 கோடியையும் அடிப்படை விலையாக குறிப்பிட்டது.

உற்பத்தியை தொடங்கிய மூன்றாவது வருடத்தில் இருந்து அடிப்படை விலையில் இருந்து இரண்டு சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் குறையும். உற்பத்தி தொடங்கிய இரண்டாவது ஆண்டில் இருந்து அடிப்படை விலை, விலை ஏற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் மாற்றி அமைக்கப்படும். அப்படியானால் தற்போதைய விலை அதிகரித்துக் கொண்டே போகும். அடிப்படை விலை ஜி.எஸ்.டி.க்கு முந்தியது. ஆக ஜி.எஸ்.டி. தனியாக உண்டு. பராமரிப்பு கட்டணம் 35 வருடங்களில் அடிப்படியில் விலையில் இருந்து 112.25% தொகை வழங்கப்படும்.




இதிலிருந்து இரண்டு பன்னாட்டு நிறுவனங்களும் நமது பொதுத் துறை நிறுவனங்களில்தான் ரயில் பெட்டி உற்பத்தி செய்யப்போகின்றன என்பது தெளிவு. இதற்கு ஐசிஎஃப் பல்வேறு வசதிகளை டி.எம்.எச். பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படும். அதோடு மட்டுமல்ல உபகரணங்கள், இயந்திரங்கள், கட்டமைப்புகளை ஐ.சி.எஃப்.பில் டி.எம்.எச். உருவாக்கிகொள்ளும். அதற்காகும் செலவுக்கு அரசு 70 கோடி வழங்கும்.

ஆண்டு ஒன்றுக்கு 16 பெட்டிகளை கொண்ட 24 வந்தே பாரத் ரயில் தொடர்களை உற்பத்தி செய்ய 160 இந்திய ரயில்வேயின் தொழில்நுட்ப ஊழியர்கள் தனியார் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.இவர்களுடைய சம்பளம் மற்ற அலவன்ஸ்கள் தற்போது உள்ள விதிப்படி வழங்கப்படும்.ஐ.சி.எப் ஊழியர்களுக்கான பயிற்சி பாடத் திட்டம் உள்ளிட்ட பயிற்சி தொகுதிகளை தனியார் தொழில்நுட்ப கூட்டாளர் திட்டமிட்டு வடிவமைக்க வேண்டும். ஆக தொழிலாளர்களும், தொழில் நுட்பமும் கூட தனியாரிடம் தரப்படும்.

ஐ.சி.எஃப்.பினால் இறுதி செய்யப்பட்ட வடிவமைப்பைக் கொண்டு உற்பத்தி செய்வதன் மூலம் வடிவமைப்புக்கான செலவுகளை தனியார் நிறுவனங்கள் கணிசமாக மிச்சப்படுத்தலாம்.ரயில் தொடர் உற்பத்திக்கு தேவையான இடவசதி, ஷெட்டுகள், வீல்செட் அசெம்பிளி லைன், பெயின்ட் பூத், சோதனை செய்வது என பல முக்கிய கட்டமைப்புகள், இலவச மின்சாரம், இலவச அழுத்தப்பற்ற காற்று போன்றவற்றை ஐ.சி.எப் வழங்க வேண்டும்.

இயந்திரங்கள் மற்ற கட்டமைப்புகளை ஐ.சி.எஃபில் நிர்மாணிப்பதற்காக அரசு ரூபாய் 70 கோடியை தனியார் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும். தனியார் உற்பத்தியாளர் அரசிடமிருந்து முன்பணமும் பெற்றுக் கொள்ளலாம். இந்திய ரயில்வேயின் தொழில்நுட்ப ஊழியர்கள் தனியார் உற்பத்தியாளர்களின் கீழ் வேலை செய்ய வேண்டும். இதே போன்று பி.எச்.இ.எல். நிறுவனமும் டிட்டாகர் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

ரயில்வேயின் கூற்றுப்படி, மொத்தம் 400 வந்தே பாரத் ரேக்குகள் கட்டம் கட்டமாக தயாரிக்கப்படும். “400 வந்தேபாரத் ரேக்குகளின் உற்பத்தியானது இந்திய ரயில்வே உற்பத்தி அலகுகளுக்குள் பல்வேறு தனியார் நிறுவனங்கள் உற்பத்தி செய்து கொள்ளை லாபமீட்ட உதவுவதாகும். அத்தகைய டெண்டர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும். எம்.சி.எம்.ஏ. (உற்பத்தி மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம்) உடன் அனைத்து டெண்டர்களும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன,” என்று இந்த ஆண்டு மார்ச் மாதம் ரயில்வே அமைச்சகம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

2023 – 24 நிதியாண்டின் இறுதிக்குள் மொத்தம் 67 ரயில்கள் அல்லது 1,072 பெட்டிகளை தயாரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பைனான்சியல் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது. ஆனால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 36 ரேக்குகளில் எட்டு மட்டுமே 2022 – 23 நிதியாண்டில் தயாரிக்கப்பட்டது. அப்படியானால் ஒப்பந்த நிறுவனங்கள் காலம் கடத்த அவர்களுக்கு கூடுதல் லாபமும், நாட்டிற்கு கூடுதல் இழப்பும் ஏற்படும்.

“வந்தே பாரத்” ரயில் உற்பத்தியை தனியாருக்கு வழங்குவதன் மூலம் இந்தியாவிற்கு வரவேண்டிய வருவாய் நாடு கடந்து பன்னாட்டு நிறுவனங்களுக்கு சென்றடைகிறது. அதோடு இந்திய ரயில்வேக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவங்களின் வளங்களும், செல்வமும் சேர்ந்தே தனியார் பன்னாட்டு நிறுவனங்கள் கபளீகரம் செய்து பொதுத்துறையை கொலை செய்திட வழி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

வந்தே பாரத் தனியார்மயம் உழைக்கும்

# ஆளுநர் மாளிகையின் புகார் கருத்துரிமையை பறிக்கும் உள் நோக்கம் கொண்டது: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

ஆளுநர் திரு.ஆர்.என்.ரவியின் அதிகார அத்துமீறலை விமர்சனம் செய்யும் உரிமையை பறிக்கும் வஞ்சக எண்ணத்துடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் மீது கூறப்பட்டுள்ள புகாரை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

25.10.2023 அன்று பிற்பகலில் ஆளுநர் மாளிகை முதன்மை நுழைவாயில் அருகில் சந்தேகப்படும் நிலையில் இருந்த கருக்கா வினோத் குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். ஆளுநர் மாளிகை பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறை அதிகாரிகளின் எச்சரிக்கை மிகுந்த நடவடிக்கையில் பிடிபட்ட குற்றவாளி ஆளுநர் மாளிகை நுழைவாயில் மீது பெட்ரோல் குண்டு வீசியுள்ளார். பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு, எந்தவித அசம்பாவிதமும் நடக்காமல் தடுத்து, குற்றவாளியை சம்பவ இடத்தில் கைது செய்துள்ளனர்.

காவல் நிலைய குற்றச் சரித்திர பட்டியல் இடம் பெற்றுள்ள குற்றவாளி கருக்கா வினோத் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அதேசமயம் ஆளுநர் மாளிகை அதிகாரி, சென்னை பெருநகர காவல் ஆணையரிடம் கொடுத்துள்ள புகாரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டை வலிந்து திணித்திருப்பதை ஏற்க இயலாது. அதனை வன்மையாக மறுக்கிறோம். ஆளுநர் மாளிகை அதிகாரியின் புகார் “திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தொண்டர்களால் பொதுக் கூட்டங்களிலும், அவர்களது சமூக ஊடகங்களிலும் அச்சுறுத்தப்படுவதாக” புகார் புனையப்பட்டுள்ளது.

திரு.ஆர்.என்.ரவி ஆளுநர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஆரம்ப நாளில் இருந்து, மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி முறைக்கு இடையூறு செய்து, அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறார். நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறைகள், மாநில அரசின் அதிகாரங்கள், சட்டமன்றப் பேரவையின் கடமைப் பொறுப்புகள், மாநில மக்களின் உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி முறைக்கு எதிராக ஆளுநர் பேசியும், செயல்பட்டும் வருவது கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகி வருகிறது. விமர்சனங்களை உள்வாங்கி, குறைகளை போக்கிக் கொள்ளும் ஜனநாயகப் பண்புகளை மறந்த ஆளுநர் மலிவான அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியிலும் ஈடுபடுகிறார். ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி காவல் துறையின் குற்றப் பதிவு சரித்திர பட்டியல் இடம் பெற்று. கடுங் குற்றவாளிகளுக்கும், சட்டத்திற்கு அடங்காத, ஊறறிந்த பிரபல ரௌடிகளுக்கும் அரசியல் தலைவர் தகுதி அளித்து வருவது குறித்து ஆளுநர் எந்த கட்டத்திலும் சிறுதும் கவலை தெரிவித்ததில்லை. மாறாக ஆன்லைன் சூதாட்டம் அறிவின் ஆற்றலை மேம்படுத்தும் என்று பேசி வந்தார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 30

## ராணுவம் என்ன பாஜகவின் அடியாளா?

“விசிஷ்ட் பாரத் சங்கல்பம் யாத்ரா” என்று பரப்புரை திட்டத்தை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளது.

அவர்கள் அனைத்தையும் இந்தியில் தான் சொல்வார்கள். ‘வளர்ந்த இந்தியா நோக்கிப் பயணம்’ என்று குத்து மதிப்பாக இதன் பொருளை ஊகிக்கலாம்.

ரத யாத்திரை, பாதயாத்திரை எல்லாம் பாஜக நடத்தியிருக்கிறது. ரதம் என்றாலும் பாதம் என்றாலும் போவது என்னவோ பேருந்து யாத்திரை தான் என்று வேண்டுமானால் கிண்டல் செய்யலாமே தவிர, அவற்றை நடத்துவது அவர்களது உரிமை.

அதைத் தடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை

ஆனால் இப்போது அவர்களுக்கு பதிலாக, அரசு அதிகாரிகள் நவம்பர் 20 முதல் ஜனவரி 25 வரை ஒவ்வொரு கிராமங்களிலும் நாடு தழுவிய பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டுமாம்.

இந்த வேலையை செய்வதற்காக ஒவ்வொரு துறையும் உயர் அலுவலர்களை ஒதுக்கி தர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு இணைச் செயலாளர்கள், துறை இயக்குநர்கள், துணைச் செயலாளர்கள் ஆகியோர் ரத் பிரபாரீஸ் (ரதப் பொறுப்பாளர்) களாக நியமிக்கப்படுவார்கள்.

இந்தியாவின் வளர்ச்சி 1947 விடுதலையிலிருந்து துவங்குகிறது. ஆனால் அதைப்பற்றி இந்த யாத்திரை பேசாது. ஆனால் கடந்த 9 ஆண்டு காலத்தை மட்டுமே அதிகாரிகள் பிரச்சாரம் செய்வார்களாம்.

அப்படியானால் அது பிஜேபியின் தேர்தல் பிரச்சாரம் தவிர வேறென்ன?

மேலும் நரேந்திர மோடியின் கட்அவுட் வைத்து, அதோடு சேர்ந்து நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளும் செல்ஃபி பாயிண்ட்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட உள்ளன.

அதிகமான மக்கள் கூடுகிற ரயில், மெட்ரோ, பேருந்து, விமான நிலையங்கள், சந்தைகள், பள்ளி கல்லூரிகள், சுற்றுலா தளங்கள், விழா கொண்டாட்ட மையங்கள், போர் நினைவுச் சின்னங்கள், ராணுவ அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் இந்த செல்பி முனைகள் வைக்கப்படும். அவற்றை ராணுவம் உருவாக்கி பராமரிக்க வேண்டும்!

தனது சுயநலத்திற்காக இந்திய அரசு கட்டமைப்பையே சீர்குலைக்க பிஜேபி திட்டமிடுகிறது.

சட்டங்கள் இயற்றவும் அரசை இயக்கவும் தமது பிரதிநிதிகளை மக்கள் தேர்வு செய்கிறார்கள். அவர்கள் அரசியல் சார்ந்தவர்கள். அரசு நிர்வாக அமைப்பு பணியாளர்களும், ராணுவத்தினரும் அரசை சார்ந்தவர்களை தவிர. எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர்.

2024 பொதுத் தேர்தலும், அதற்கு முன்னோடியாக இப்போது ஐந்து மாநிலத் தேர்தல்களும் நடக்க இருக்கின்றன. இப்போது அரசு இயந்திரத்தையும் ராணுவத்தையும் பாஜகவுக்கு பிரச்சாரம் செய்யும் வேலையாட்களாக இந்த அரசு மாற்றுகிறது.

இந்த தீச் செயல், இந்திய ஜனநாயகத்திற்கு பேராபத்தை ஏற்படுத்தும். ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மதம், ஒரே கட்சி, ஒரே தலைவர் என்ற பிஜேபியின் அராஜக கொள்கை நிலையை நோக்கி, அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக நாடு இழுத்துச் செல்லப்படுகிறது

ஒன்றிய அரசின் முன்னாள் செயலாளரான திரு இ.ஏ.எஸ். சர்மா தேர்தல் ஆணையத்துக்கு இரண்டு கடிதங்களை எழுதியிருக்கிறார். இந்தியப் பிரதிநிதிகள் சட்டத்திற்கும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், இந்திய தண்டனை சட்டத்திற்கும் இவை எதிரான நடவடிக்கை என்று பட்டியலிட்டு, ஆணையம் இதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

நாட்டு மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என அரசு பணியாளர்கள், செல்வாக்கு செலுத்துவது மத்திய சிவில் சர்வீஸ் நடத்தை விதிகளுக்கு எதிரானது.

இவ்வாறு செயல்பட வேண்டும் என்று அரசு பணியாளரை நிர்ப்பந்திப்பது தேர்தல் விதிகள் மற்றும் இந்திய கட்டணச் சட்டத்தின் கீழ் குற்றங்களாகும்.

அரசு பணியாளர்கள், இந்தியாவின் எந்த அரசியல் இயக்கத்திலும் பங்கெடுப்பதோ, உதவுவதோ, சந்தா செலுத்துவதோ கூடாது என விதிகள் கூறுகின்றன

ஒன்றிய அமைச்சர்கள் நான்கு பேர் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் போது, அங்கு அரசு பணியாளர்களையும் ராணுவத்தையும் கொண்டு பரப்புரை செய்தால், அவர் அரசு பதவி எதையும் வகிக்க கூடாதென தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டியவர் ஆவார்

என்று கூறியுள்ள சர்மா, இது அனுமதிக்கப்பட்டால் அரசியலமைப்புச் சட்டத்தின் மையக் கருத்தான, ஜனநாயக விழுமியங்கள் சீர் செய்ய முடியாத அளவுக்கு கடும் சேதம் அடையும் என எச்சரித்துள்ளார்.

தேர்தல் ஆணையம், நீதிமன்றங்கள் உள்ளிட்ட சுயேட்சையான அமைப்புகளை ஆர்எஸ்எஸ்பாஜக தனது துணை நிறுவனங்களாக மாற்றிக் கொண்டே இருக்கிறது.

அரசு பணியாளர்களையும் ராணுவத்தையும் கொண்டு மேற் சொன்ன யாத்திராவை நடத்தக்கூடாது எனத் தேர்தல் ஆணையம் தடை விதிக்க வேண்டும்.

# தலித் மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கத்தை வெற்றிகரமாக்குவோம்!

### தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில நிர்வாக குழு அறைகூவல்



தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர், செயலாளர்கள் உள்ளடக்கிய மாநில நிர்வாக குழு கூட்டம் சென்னை பாலன் இல்லத்தில் மாநிலத் தலைவர் நா. பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு. வீரபாண்டியன், தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி. மாநில பொதுச்செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் ஆகியோர் அரசியல் விளக்க உரை ஆற்றினர். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற தலித் உரிமைகள் உச்சி மாநாட்டு பிரகடனத்தின் படி நடைபெறும் கையெழுத்து இயக்கத்தை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம் . செல்வராசு, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், சங்கத்தின் மாநில துணைத் தலைவருமான கே. மாரிமுத்து ஆகியோர் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி உள்ளிட்ட பல்வேறு தலித் அமைப்புகளை ஒருங்கிணைத்து வரும் நவம்பர் 18 மாநில அளவிலான தலித் உரிமைக்கான உச்சியும் மாநாட்டை சென்னையில் நடத்துவது

தலித் உரிமைகளை வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் கோரிக்கை மனுவில், தமிழ்நாட்டில் 50 லட்சம் கையெழுத்து பெறும் இயக்கத்தை வரும் அக்டோபர் 25ல் பொதுவாழ்வு பிரமுகர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்களை உள்ளிட்ட பொதுமக்களை சந்தித்து கையெழுத்து பெறுவது .

வரும் டிசம்பர் 4ஆம் தேதி டெல்லியில் லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் கோரிக்கை பேரணியில், நமது சங்கமும் பங்கேற்பது என தீர்மானிக்கப்பட்டது.

# சட்டத்தின் ஆட்சி முறையை தகர்த்து வரும் ஆளுநருக்கு இரா.முத்தரசன் கண்டனம்

சட்டத்தின் ஆட்சி முறையை தகர்த்து வரும் ஆளுநருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சட்டத்தின் ஆட்சி முறைக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அவர் ஆளுநர் பொறுப்பேற்ற நாளில் இருந்து மக்களாட்சியின் மாண்பையும், மரபையும் அலட்சியப்படுத்தி வருகிறார்.

சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி, ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் மறுத்து வருகிறார். வழிவழியாக பின்பற்றி வரும் மரபுக்கு மாறாக விளக்கம் பெறுதல் என்ற பெயரில் மசோதாக்களை திருப்பி அனுப்புகிறார். அரசு தரப்பில் போதுமான விளக்கம் அளித்த பிறகும் எல்லையற்ற கால தாமதம் செய்து வருகிறார். “நீட்” தேர்வில் இருந்து, தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் மசோதாவை கிடப்பில் போட்டு வைத்துள்ளார். இதன் விளைவாக வளரும் இளைய தலைமுறையினர் தற்கொலை சாவுக்கு நெட்டித் தள்ளப்படுகிறார்கள்.

இதே போல் ஆன்லைன் சூதாட்டத்தை தடுக்கும் சட்டம் நிறைவேற்ற ஒப்புதல் வழங்க மறுத்து வருவதால். சிறு, குறு தொழில் முதலீட்டாளர்கள் உட்பட பல குடும்பங்கள் திவாலாகி, உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள் என்ற துயரத்தை கண்டு கொள்ளாத “இதயமும் இரக்கமும்” இல்லாதவராக ஆளுநர் அமைந்திருப்பது வரலாற்று அவலமாகும்.

பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் மூலம் தமிழ்நாடு மக்கள் ஏற்க மறுத்து, எதிர்த்து போராடி வரும் தேசிய கல்விக் கொள்கையை பகுதி, பகுதியாக திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். நூற்றாண்டு கண்டு வாழ்ந்து வரும் தியாக சீலர், தகைசால் தமிழர் என் சங்கரய்யாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் அரசின் முடிவை ஏற்க மறுத்து வருகிறார்.


அறிவுத்துறை உலகம் ஆயிரம் ஆண்டுகளில் தலைசிறந்த பேரறிவாளர் என்று அறிவித்த காரல் மார்க்ஸ் சிந்தனைகளை இழிவுபடுத்திபேசிவருகிறார்.

நாட்டின் விடுதலைக்கு போராடிய வீரர்களையும், தியாகிகளையும் தேடி, தேடி பெருமைப்படுத்தும் தமிழ்நாடு அரசின் கொள்கைக்கு எதிராக பகைமையும். வெறுப்பும் பரப்பும் தரம் தாழ்ந்த பிரச்சாரகராக செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவி கூட்டாட்சி கோட்பாட்டினை தகர்த்து வருகிறார். மதவெறி, சாதிய ஆதிக்க உணர்வோடு செயல்படும் அமைப்புகளின் எதிர்மறை விளைவுகள் குறித்து வாய் திறக்காத ஆளுநர் ஆர்.என்.ரவி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, அமைதி நிலையை பாதுகாத்து வரும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையை விமர்சித்து அடிப்படையற்ற அவதூறுகள் பரப்பி வருகிறார். மலிவான அரசியலில் ஈடுபட்டு வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் சட்டவிரோத, அநாகரிக செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## வினாடி – வினா

1. உழைக்கும் மக்கள் அதிகாரம் செலுத்திய பாரிஸ் கம்யூன் எப்பொழுது அமைக்கப்பட்டது?
2. ஐக்கிய நாடுகள் சபை (United Nations - UN) அதிகாரப்பூர்வமாக எப்போது தொடங்கப்பட்டது?
3. ஐ.நா.வில் கடைசியாக சேர்ந்த நாடு எது?
4. ஐக்கிய நாடுகள் சபையின் முதல் பெண் தலைவர் யார்?
5. ரோசா லக்சம்பர்க் சுட்டுக் கொல்லப்பட்டு (1919 சனவரி 15) எங்கு வீசி எறியப்பட்டார்?
6. வானியலில் பெரும் புரட்சிக்கு வித்திட்ட தொலைநோக்கியை (டெலஸ்கோப்) கண்டுபிடித்தது யார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



# இஸ்ரேலின் இன அழிப்புப் போரும் அமெரிக்க வல்லரசின் திட்டமும்



வ.மணிமாறன்





**ஹமாஸ் தாக்குதல் நடத்திய அக்டோபர் ஏழாம் தேதி முதல், இஸ்ரேல் ராணுவம் ‘இலக்குகளை’ துல்லியமாக குறிவைத்து தாக்கக்கூடிய ஆயுதங்களைக் கொண்டு மிகப்பெரிய குண்டுகள், ஏவுகணைகள் உட்பட அனைத்து அதிநவீன ஆயுதங்களுடன் தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது. மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் குண்டு மழை பொழிகிறது.**

மருத்துவமனைகள், அகதி முகாம்கள், உணவு தண்ணீருக்காக காத்திருக்கும் மக்கள் என பாலஸ்தீனர்களின் நடமாட்டம் மிகுந்த இடங்களைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பேக்கரிகள், பல்பொருள் அங்காடிகள் போன்றவையும் குண்டு வீச்சில் இருந்து தப்பவில்லை. ஐ.நா. வகுத்துள்ள எந்த நெறிமுறையையும் அடாவடியாக பின்பற்ற மறுத்து, பாலஸ்தீனம் மீது வெறியுடன் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் ராணுவத் தாக்குதலில், இதுவரை 18 வயதுக்குட்பட்ட 2360 குழந்தைகள், 1200 பெண்கள் உட்பட 5,791 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 15,273 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 700 பேர் செத்து மடிந்துள்ளனர். (பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் 25.10.2023 அன்று வெளியிட்ட செய்தி).

## இடிபாடுகளாக வீடுகள்

இஸ்ரேல் தாக்குதலில் காசா பகுதியில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட வீடுகள், கட்டடங்கள் நொறுங்கி வெறும் இடிபாடுகளாகக் காட்சியளிக்கின்றன. உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக துண்டு நிலப்பகுதிக்குள் பாலஸ்தீனர்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றனர். மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. 700 நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கான வசதிகளைக் கொண்ட காசா நகரத்தின் மிகப்பெரிய அல் ஷிஃபா மருத்துவமனையில், 5 ஆயிரம் நோயாளிகள் உள்ளனர். இஸ்ரேல் ராணுவ தாக்குதலில் 40 மருத்துவமனைகள் மூடப்பட்டு விட்டன.

காசா பகுதியில் வாழும் 23 லட்சம் பேரில், 14 லட்சம் பேர் வீடுகளை இழந்து தங்குமிடம் தேடி அலைவதாக ஐ.நா. சபையின் நிவாரணப் பணிகள் அமைப்பு (UNRWA) தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு பராமரிக்கும் இடங்களில் மட்டும் 5 லட்சத்து 80 ஆயிரம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். இஸ்ரேலின் கொலை வெறித் தாக்குதலில் இந்த அமைப்பின் பணியாளர்களில் 29 பேர் இறந்து விட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காசா பகுதிக்கு உணவு, தண்ணீர், மருத்துவப் பொருட்கள்கூட செல்ல விடாமல் இஸ்ரேல் தடுத்துள்ளது. மருத்துவமனை ஜெனரேட்டர்கள், நீர் இறைக்கவும் உப்பு நீக்கவும் உதவக்கூடிய மோட்டார்கள் போன்றவற்றை இயக்குவதற்கான எரிபொருட்கள் தடுக்கப்பட்டுள்ளன. காசாவிற்கு டீசல், பென்சீன், சமையல் எரிவாயு ஏற்றிக்கொண்டு ஒரு நாளைக்கு 40 டிரக்குகள் வந்து கொண்டிருந்தன. அக்டோபர் 7 முதல், ஒரு டிரக் கூட உள்ளே வர அனுமதி தரப்படவில்லை என ஐ.நா. நிவாரண பணிகள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

“காசாவுக்கு மனிதாபிமான உதவியா? – மின்சாரம் வழங்கப்பட மாட்டாது. தண்ணீர் குழாய்கள் திறக்கப்பட மாட்டாது. எரிபொருள் டிரக்குகள் உள்ளே வராது” என ஆணவத்துடன் அறிவித்துள்ளார் இஸ்ரேலிய எரிசக்தி அமைச்சர் காட்ஸ்.

ஒரு நாளைக்கு சில துண்டுகள் ரொட்டியும்; மூன்று பாட்டில் தண்ணீரும் மட்டுமே பாலஸ்தீனர்களுக்கு கிடைத்து வருகின்றன. இதனால் உணவு, தண்ணீர் இன்றி உயிரிழக்கும் ஆபத்தை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

காசா நகரில் உள்ள அல்அஹ்லி அல் அரபி மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 500 பேர் செத்து மடிந்தனர். இஸ்ரேலின் இனவெறிப் போருக்கு எதிராக உலக நாடுகளில் மக்கள் போராட்டம் வெடித்தது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளில் அரசுகளின் தடைகளை மீறி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா பச்சைக்கொடி

இந்நிலையில், அக்டோபர் 18ஆம் தேதி இஸ்ரேல் சென்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை ஆரத்தழுவி, இஸ்ரேலுக்கு ஆதரவான ராணுவவாத உரையை நிகழ்த்தினார்.

“நான் ஒரு செய்தியுடன் இஸ்ரேலுக்கு வந்திருக்கிறேன். நீங்கள் தனியாக இல்லை. அமெரிக்கா.. நாங்கள்.. உங்கள் பக்கம் நிற்கிறோம்” என்று அவர் உரையைத் தொடங்கினார். பாலஸ்தீனர்கள் மீது புனையப்பட்ட, ஆத்திரமூட்டும் குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்தார்.

அதிபர் பைடன் செல்வதற்கு முந்தைய 10 நாட்களில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களை இஸ்ரேல் ராணுவம் கொன்றுள்ளது. சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனைகள் மீது 136 தாக்குதல்கள் நடந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. பொதுமக்கள், மருத்துவமனைகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் இலக்கு வைத்து நடத்திய தாக்குதல்கள் எதையும் அதிபர் பைடன் கண்டிக்கவில்லை. வடக்கு காசாவில் இருந்து பாலஸ்தீனர்கள் வெளியேற்றப்படுவதையும் அவர் கண்டிக்கவில்லை. ஹமாஸ் இஸ்ரேல் இடையே போர் நிறுத்தத்திற்கோ; போரின் தீவிரத்தை குறைக்கவோ அவர் முயற்சிக்கவில்லை. மாறாக, “இஸ்ரேலுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்“ என்று கூறியதன் மூலம் காசா மீது தாக்குதல் நடத்த அதிபர் பைடன் பச்சைக்கொடி காட்டியுள்ளார்.

## திட்மிட்ட இன அழிப்பு

அல் அஹ்லி மருத்துவமனை மீது பாலஸ்தீனர்களே ஏவுகணை தாக்குதல் நடத்தி சொந்த மக்களை கொன்றதாகவும் அபத்தமாக அவர் கூறினார். “இதுவரை எங்களிடம் உள்ள தகவல்களின் அடிப்படையில், காசாவில் இருக்கும் மற்றொரு பயங்கரவாத குழுவால் ஏவப்பட்ட தவறான ராக்கெட்டின் விளைவாக, மருத்துவமனை மீது தாக்குதல் நடந்திருப்பதாகத் தெரிகிறது” என்று அதிபர் பைடன் குற்றம்சாட்டினார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அரசுகளின் இந்த அபத்தமான புகார், உலகம் முழுவதும் அவமதிப்புடன் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனர்களால் ஏவப்பட்ட ராக்கெட்தான் மருத்துவமனையைத் தாக்கியது என்பதற்கான ஆதாரமாக இஸ்ரேல் ராணுவம், வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகளை வெளியிட்டது. அந்த ஆடியோவில், ராக்கெட் தவறுதலாக ஏவப்பட்டு செயலிழந்ததைப் பற்றி இரண்டு ஹமாஸ் உறுப்பினர்கள் பேசிக் கொள்கின்றனர். அதில் ஒரு தேவாலயத்திற்குப் பின்னால் உள்ள கல்லறையிலிருந்து ராக்கெட் ஏவப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் பல மைல்களுக்கு அப்பால் இருந்து ராக்கெட்டுகள் ஏவப்பட்டிருப்பதை காணொளிகள் வெளிப்படுத்துகின்றன. இஸ்ரேல் வெளியிட்ட அதிகாரப்பூர்வ ஆதாரங்களே இப்படி முரண்பாடாக உள்ளன.

அதேநேரத்தில், மருத்துவமனையின் முன்பகுதியில் ஏற்பட்ட சேதத்தை வெளிப்படுத்தும்காணொளிகளும்வெளியாயின. அவை காற்றின் மேற்பகுதியில் ஏற்பட்ட அழுத்தத்தையும்; பள்ளம் இல்லாமல் பாதிப்பு ஏற்படுத்தியதையும் வெளிப்படுத்துகின்றன.

அமெரிக்கா வழங்கிய ஜேடிஏஎம் குண்டுகளைப்(JDAM bombs) போன்று காற்றில் வெடிக்கும் குண்டுகளால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்றும்; இது போன்ற சேதத்தை ஒரு பழுதடைந்த ராக்கெட் ஏற்படுத்தியிருக்கும் என்பதை கற்பனை கூட செய்ய முடியாது என்றும் பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் கூறுகின்றனர். அதிகமான மக்கள் குவிந்திருந்த மருத்துவமனை வளாகத்தை இஸ்ரேல் துல்லியமாக குறிவைத்து, அதிகபட்ச சேதத்தை ஏற்படுத்த காற்று வெடிப்பு முறையை பயன்படுத்தியுள்ளது. இது ஒரு திட்டமிட்ட இனப் படுகொலை ஆகும்.

இஸ்ரேல் நடத்தி வரும் இந்த தாக்குதல்கள், சராசரி போர் என்பதை விட ஒரு இனத்தின் மீதான வன்மமாக, இன அழிப்பாக இருக்கிறது.

## அமெரிக்காவின் வெற்றுப் பேச்சுகள்

“இஸ்ரேலுக்கு தமது மக்களைப் பாதுகாக்க உரிமை இருக்கிறது” என்றும் “9/11 சம்பவத்தின் பின்னர், நாங்கள் நீதியை நாடினோம், அதற்கான நீதியைப் பெற்றோம். அதேபோன்று இஸ்ரேலுக்கும் நீதி கிடைக்கும்” என்றும் அமெரிக்க அதிபர் பைடன் கூறுகிறார். இதையே பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளும் கூறுகின்றன.

தமது மக்களைப் பாதுகாப்பதற்கு இஸ்ரேலுக்கு உள்ள அதே உரிமை, ஹமாஸ் உள்ளிட்ட பாலஸ்தீன அமைப்புகளுக்கும் உண்டு என்பதை அமெரிக்க அதிபரும் மேற்கு நாடுகளும் பேச மறுக்கின்றன.



தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# பேஸ்மெண்ட்டும் வீக்கு! பில்டிங்கும் வீக்கு!!

**“தூக்கு பாப்போம் என்னை! சேலஞ்ச் பண்றேன். மத்தவங்கள தூக்கறது எல்லாம் பெரிய விஷயமில்லை. என்னைத் தூக்கு பார்ப்போம். டைரக்ட் சேலஞ்ச்! என்னை டச் பண்ணி பாரு! என்னத் தூக்கு! டீல் போட்டு பார்ப்போம்! அமர் பிரசாத் ரெட்டிய தூக்குற அளவுக்கு இங்கே எவனும் ஆள் கிடையாது”**





அமர் பிரசாத் ரெட்டி அடிக்கடி இப்படித்தான் உதார் விட்டுக் கொண்டிருந்தார்.

இவர் என்ன சுதந்திர போராட்ட வீரரா? மக்கள் போராட்டங்களுக்கு தலைமை ஏற்றவரா? ஆதிக்க சக்திகளை எதிர்த்து சமர் புரிந்தவரா? 30, 40 வருஷம் களப்பணிகளில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவரா?

எதனாலோ போலீஸ் வேலையை விட்டுவிட்டு அண்ணாமலை தமிழ்நாட்டுக்கு வரும்போது, அவர் கையை பிடித்து கொண்டு வந்ததைத் தவிர வேற என்ன தகுதி இவருக்கு?

‘டச்’ பண்ண முடியாத அளவுக்கு இவர் என்ன, 3000 வோல்ட் மின்சாரக் கம்பியா?

வான்டடா வந்து ‘நானும் ரவுடிதான்’னு ஜீப்பில் ஏறினால் எப்படிக் கூட்டிப் போக முடியும்?

பேச்சு பேச்சா இருந்த வரைக்கும் யாரும் இதை கண்டுக்கவில்லை. வீர வசனம் பேசிக் கொண்டு, அரசாங்க வண்டியின் கண்ணாடியை உடைத்ததால், இப்போ தூக்கிட்டாங்க! ‘டச்’ பண்ணி நாளைந்து நாளாகிவிட்டது.

“ஐயோ! வெள்ளிக்கிழமை ஏன் கைது பண்ணினீர்கள். சனி, ஞாயிறு, திங்கள் விடுமுறை நாள் என்பதால் அவரை சிறையில் வைக்கலாம் என்ற தந்திரம் தானே என்றெல்லாம் பாஜக தலைவர்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சட்ட விரோத சம்பவம் நிகழ்ந்தால் உடனே கைது செய்வார்கள். கிழமை, நாள், நட்சத்திரம், ராசி எல்லாம் பார்த்தா கைது செய்ய முடியும்?

பாஜக தலைவர் அண்ணாமலை வீட்டுக்கு எதிரில் நெடுஞ்சாலைத் துறை இடத்தில் 50 அடி உயர கம்பத்தை நட்டு, கட்சிக் கொடி ஏற்றப் போனார்களாம். அது கூடாது என அந்தப் பகுதி மக்கள் தடுத்திருக்கிறார்கள். பக்கத்திலேயே உயர் அழுத்த மின்சார கம்பிகள் செல்கின்றன, காற்றில் கொடி மரம் சாய்ந்து விழுந்தால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பது அந்த மக்களின் அச்சம்.

கொடி பறப்பதை அண்ணாமலை பார்க்க வேண்டும் என்றால், வீட்டிற்குள்ளேயே கொடிக்கம்பம் நட்டுக் கொள்ள வேண்டியதுதானே!? அவர் ஒன்றும் வறுமையில் உழன்று, ஒட்டுக் குடித்தனம் நடத்தவில்லையே!?

மாதம் ஒன்றுக்கு மூன்றே முக்கால் லட்ச ரூபாய் வாடகையாம் அவரது வீட்டுக்கு!! பாவம், அவரிடம் அந்த வாடகை கொடுக்க கையில் பணம் இல்லை. வருடக் கணக்கில் அவரது நண்பர்கள் தான் அந்த வாடகையை கொடுப்பதாக கூறியிருக்கிறார். நல்ல நண்பர்கள்!? அந்த வீட்டிற்குள்ளேயே கொடி நாட்டியிருந்தால் யார் வந்து கேட்க போகிறார்கள்?

ஒரு பொது இடத்தில் நிகழ்ச்சி நடக்கிறது என்றால், காவல் நிலையத்தில் அனுமதி வாங்க வேண்டும். நெடுஞ்சாலையில் கொடி நட வேண்டும் என்றால் அந்தத் துறையிடம் அனுமதி பெற்றாக வேண்டும்.

ஏதேனும் பொது நிகழ்ச்சி நடத்துவதற்கு முதல் நாள் இரவு மூன்று முழக்குச்சியில் தெருவோரத்தில் கொடி கட்டி வைத்தாலே, காவல்துறை வந்து அவிழ்த்து காலையில் கட்டுங்கள் என்று சொல்கிறார்கள். மாநில ஆளுங்கட்சியான திமுக உள்ளிட்ட எல்லா கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இதே வரையறை தான் கடைபிடிக்கப்படுகிறது.

ஆனால் இதையெல்லாம் நாங்கள் பொருட்படுத்த மாட்டோம். இங்கு ஒரு மாநில அரசு இருக்கிறது, காவல்துறையும் விதிகளும் இருக்கின்றன என்பதை எல்லாம் பொருட்டாகவே கொள்ள மாட்டோம். டில்லி பேரரசை நாங்கள் கட்டியாள்வதால், இங்குள்ள மாநிலச் சிற்றரசு எங்களிடம் கைகட்டி பணிந்து, நாங்கள் செய்வதை எல்லாம் வாய் பொத்தி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது தானே அண்ணாமலைப் பரிவாரத்தின் ஆணவம்!

இனி தமிழ்நாட்டில் திமுகவின் ஒரு கொடி கூட பறக்காது என்றெல்லாம் பேசுவது அவர்களுக்கே கொஞ்சம் ஓவராக தெரியவில்லை!

கொலை செய்தவன், கொள்ளையடித்தவன், பிக்பாக்கெட் காவல்துறை பதிவேடுகளில் இருக்கும் ரவுடிகள் எல்லாரையும் கட்சியில் சேர்த்துக் கொண்டு, இவர்கள் கலகத்தைத் தூண்ட முயற்சிக்கலாம்.

ஆனால், சாமானிய வாழ்க்கையை நடத்திக் கொண்டு, தன் இயக்கத்துக்காக, கொள்கைக்காக, கொடிக்காக உயிரையும் கொடுக்கத் தயாரான பல லட்சக்கணக்கான தொண்டர்கள் தமிழ்நாட்டின் பாரம்பரிய கட்சிகளில் இருக்கிறார்கள் என்பது துதிபாடிகளையும் குற்றவாளிகளையும் மட்டுமே பார்த்துப் பழகிய அண்ணாமலைக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அப்புறம், நடந்தது என்ன என்று விசாரிக்க தில்லித் தலைமை, வேறு மாநிலங்களில் இருந்து நான்கு பேரை தமிழ்நாட்டுக்கு அனுப்புகிறார்களாம்.

மணிப்பூர் நான்கு மாதங்களுக்கும் அதிகமாக பற்றி எரிந்து கொண்டிருக்கும் நிலையில், ஏதாவது நான்கு பேரை இந்த பாஜக அனுப்பி விசாரித்து இருக்கலாமே! முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி, முன்னாள் ராணுவ தளபதி முன்னாள் காவல்துறை தலைவர் எல்லோரையும் அரசு பதவிகளில் அமர்த்தி இருக்கிற கட்சி தானே அது! ஏன் மூடிக்கொண்டார்கள்?

ஏற்கனவே சனாதன ஒழிப்பு, அறநிலையத்துறை அமைச்சருக்கு, இந்து விரோதி பட்டம், உச்சநீதிமன்ற வழக்குகள் என அவர்கள் எடுத்த எல்லா கணைகளும், பூண் கழன்று காலடியில் கிடக்கின்றன!

2024 பொதுத்தேர்தல் வரை இவர்கள் என்னென்னவற்றையெல்லாம் எடுத்து ஆடுவார்கள் என்பதை இந்த தமிழ்நாட்டு மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**- ஜனன்**

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்கா 2001ல் ஆப்கானிஸ்தான் மீதும், 2003ல் ஈராக் மீதும் படையெடுத்து ஆக்கிரமிக்க, 9/11 தாக்குதலைப் பயன்படுத்தியது. தொடர்ந்து, அமெரிக்கா நடத்திய லிபியா மீதான போர்; சிரியாவில் சிஐஏ ஆதரவு ஆட்சிமாற்றத்துக்கான போர்.. இப்படி உலகின் மேல்நிலை வல்லரசாக, உலக ரவுடியாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அமெரிக்கா நடத்திய போர்களில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மாண்டுள்ளனர். ஜனநாயகம், நாடுகளின் இறையாண்மை, தேசிய நலன் என்பதெல்லாம் ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு வெற்றுப் பேச்சுகள் தான்.



**ஐ.நா. தீர்மானங்கள் தோற்கடிப்பு**

இதனிடையே, மிகப்பெரும் நெருக்கடியில் சிக்கியிருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. பாதுகாப்பு சபையில் இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

ஒன்று, ரஷ்யா கொண்டு வந்த தீர்மானம். அதில், இஸ்ரேல் காசா பிரச்சனையில் முழுமையான போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். காசா பகுதிக்கு உணவு உள்ளிட்ட பொருட்கள் கொண்டு செல்வது தடுக்கப்படக் கூடாது என்று தீர்மானம் வலியுறுத்தியது.

இந்தத் தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த அமெரிக்கா, தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு இருப்பதை ரஷ்யாவின் தீர்மானம் ஏற்கவில்லை என குற்றம்சாட்டியது. பயங்கரவாத தாக்குதல்களையும் இஸ்ரேல் தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையையும் ரஷ்யாவின் தீர்மானம் சமமாக கருதுகிறது என்றும் அமெரிக்கா சாடியது. ஐ.நா. முடிவுகளை ரத்து செய்வதற்கான வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யாவின் தீர்மானத்தை நிறைவேறவிடாமல் அமெரிக்கா தடுத்துவிட்டது.

அடுத்து, இரண்டாவது தீர்மானம் பிரேசில் கொண்டு வந்தது.

அதில், காசாவில் வாழும் மக்களுக்கு உயிர் காக்கும் உதவிகளை வழங்குவதற்கான, மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியது. இந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்ற விடாமல் அமெரிக்கா தடுத்து நிறுத்தியது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக உள்ள ஐந்து நாடுகளில் எந்த ஒரு நாடு எதிர்ப்பு தெரிவித்தாலும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது.

இந்த வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இஸ்ரேலின் இன அழிப்பு போர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அமெரிக்கா தொடர்ந்து தடுத்து வருகிறது. சியோனிச இன வெறியால் பாலஸ்தீன மக்கள் அழிக்கப்படுவதற்கு அமெரிக்க வல்லரசு பாதுகாப்பு கவசமாக துணை நிற்கிறது.

**மேலும் ராணுவ உதவி**

மத்திய கிழக்குப் பகுதியில் இஸ்ரேல் மூலம் பினாமி போர் நடத்தி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், இஸ்ரேல் மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு மேலும் 100 பில்லியன் டாலர் ராணுவ உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. அதிபர் ஜோபைடன் இதற்கான தீர்மானத்தை அமெரிக்க நாடாளுமன்றத்தில்(காங்கிரஸ்) கொண்டு வந்து விரைவில் நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே சர்வதேச சமூகம், ராணுவ ரீதியாக தீர்வு காணும் நோக்கத்துடன் இஸ்ரேல் அரசு தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருவதை தடுத்து நிறுத்த வேண்டும். பாலஸ்தீனர்கள் மீள்குடியேற்றம், புலம்பெயர்தல் போன்ற நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்.

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இஸ்ரேல் உடனடியாக நிறுத்துவதும்; பாலஸ்தீன மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகளையும் நியாயமான கோரிக்கைகளையும் அங்கீகரிப்பதும் தான் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஒரே வழி. இதனை உலகம் முழுவதும் உள்ள கம்யூனிஸ்ட்களும் ஜனநாயக சக்திகளும் போருக்கு எதிரான மக்களும் வலியுறுத்தி போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டும்.

தொடர்புக்கு: 9500001224



த.லெனின்

# அடையாறு ஆனந்த பவன் மீது சங்கிகளின் விஷமப் பரப்புரை!

நீர் இன்று அமையா
யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொத்தோர் உயிர்
கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின்
பிண்டம்
உணவு எனப்படுவது
நிலத்தோடு நீரே

என்கிறது புறநானூறு.

பாரகம் அடங்கலும் பசிப்பிணி
அறுக !

என ஆணையிடுகிறது மணிமேகலை.

இப்படி உணவின் முக்கியத்துவத்தை அது அனைவருக்கும் கிடைத்திட நமது இலக்கியங்கள் பேசினாலும் அதற்கான போராட்டங்களும் தொடர்ந்தன.

**பெரியாரும் பிராமணாள் கஃபேக்களும்**

இடைப்பட்டக் காலத்தில் உருவான சாதி உணவிலும் கூட பிரிவினைகளை ஏற்படுத்திற்று. சைவம் என்றும் அசைவம் என்றும் அது பிரிக்கப்பட்டாலும் சமூகத்தில் சாதிகள் கெட்டிப்பட்ட பிறகு உயர்சாதியினர் உண்பதற்கு குறிப்பாக பிராமணர்கள் உணவு உண்ண பிராமணாள் கஃபே கள் உருவாக்கப்பட்டன. மற்ற சாதியினருக்கு உணவு உண்ண தனி இடங்களும் அமைக்கப்பட்டன.

1940 க்கு முன்பு தமிழகத்தின் காட்சி பிராமணர் காஃபே என்றே இருந்தது உணவு உண்ண கூட பிராமணர்களுக்கு மற்றவர்களுக்கும் தனித் தனி இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதைத்தான் பின்னர் ஆங்கிலேயர்கள் நடத்திய உணவு விடுதியிலும் ஆங்கிலேயர்களுக்கு உணவு உண்ண தனி இடமும் மற்றவர்களுக்கு நுழைய தடையும் விதித்த கொடுமையும் நடந்தது.

தமிழகம் முழுவதும் பிராமணாள் கஃபே கள் முன்பு பெரியார் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் இயக்கம் தொடர் போராட்டங்களை நடத்தியது சுமார் 8 மாத காலம் இப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. திருவல்லிக்கேணி முரளி பிராமணாள் கஃபே முன்பு போராட்டம் நடந்த போது போராடியவர்கள் மீது மாடியில் இருந்து வெந்நீர் ஊற்றிய சம்பவங்களும் நடந்தது.

1957 மே 5ஆம் தேதி தொடங்கிய இந்த போராட்டம் 1958 மார்ச் 22ஆம் தேதி முரளி ஐடியல் காஃபே என்ற பெயர் மாற்றத்தோடு முடிவுக்கு வந்தது மேலும் அதன் உரிமையாளர் சிந்தாதிரிப்பேட்டையில் தந்தை பெரியாரை நேரில் சந்தித்து இந்நிகழ்வுகளுக்கு வருத்தமும் தெரிவித்தார் என்பது வரலாறு.

பொதுவாக திராவிடர் கழக மாநாடு நடத்தப்படும் போது பெரிய அளவில் பந்தல் அமைக்கப்பட்டு நடத்தப்படும் அதன் அறிவிப்பில் சமையல் உணவு குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கும். அப்படித்தான் நாடார் சமையல் என்பதை முதன்முதலாக விருதுநகர் மாநாட்டில் குறிப்பிட்டது அன்றைய பெரியாரின் திராவிடர் கழகம்!

உணவு சமைத்தலில் இன்று பல முறைகள் உண்டு சேலம் ஆற்காடுஎன்று பிரியாணி சமைக்கும் முறைகளை போல தமிழ்நாட்டில்சைவ அசைவ உணவுகளுக்கு இன்று பல ஊர்களின் பெயர்களோடும் சில நேரங்களில் சாதியின் பெயர்களோடும் கூட உணவகங்கள் நடத்தப்படுகின்றன

ஆனால் அவ்விடங்களில் சாதியை காரணம் காட்டி உணவு உண்ண தனித்த இடங்கள் ஒதுக்கப்படுவதில்லை. இன்று எல்லோருக்கும் எல்லா தொழிலும் செய்யும் நிலை உருவானதற்கு பெரியார் முக்கிய காரணம் என்றால் சங்கிகள் ஏன் கொதிக்க வேண்டும்?

**உணவில் காவி அரசியில்!**

உணவில் அரசியலையும் மதத்தையும் கலந்து கலவரத்துக்கு பயன்படுத்துவது தான் ஆர்எஸ்எஸ் பாஜகவின் கைவந்த கலை. கடந்த காலங்களில் அவர்கள் மாட்டிறைச்சிக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் கும்பல் வன்முறையால் அடித்துக் கொல்லப்பட்ட சிறுபான்மை இஸ்லாமியர்கள்,தலித்துகள் என்று ஒரு பெரும் பட்டியலே இருக்கிறது.



இந்தியாவில் இஸ்லாமியர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே பல நூற்றாண்டு காலம் மாட்டிறைச்சி உண்ணும் வழக்கம் இருந்தது. ஒடுக்கப்பட்ட தலித் மற்றும் சூத்திர சாதிகளும் சுத்த சைவ உணவை உண்ணும் பிராமண சாதியினரும் அருகருகே வாழ்ந்தார்கள். ஆனால் பாஜகவின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் மாட்டிறைச்சி மத அடிப்படையில் தடை என்றால் பாசிசம்தான் உணவு தட்டுகளில் பரிமாறப்படுவது என்பதை தவிர வேறு என்ன?

தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் வீணா சத்ருக்னா கூற்றுப்படி மாட்டு இறைச்சியில் 21% புரதங்கள் உள்ளன. அரிசியில் 68% ம் காய்கறிகளில் 10% ம் தான் உள்ளன என்பது மாட்டிறைச்சியை புலால் உணவை சாதாரண உழைக்கும் மக்கள் தவிர்க்க இல்லாது என்பதை அழுத்தமாக காட்டுகிறது.

ஏன் கடந்த கர்நாடக பாஜக ஆட்சியில் அமைக்கப்பட்ட கல்வி குழு "முட்டையும் இறைச்சியும் உட்கொள்வது மாணவர்களிடையே வாழ்க்கை முறை சீர்கேடுகளை உருவாக்கும் என்றும் மேலும் மனம் மற்றும் உணர்ச்சிகளை நல்ல முறையில் பராமரிக்க சாத்வீக உணவான சைவ உணவை உண்ண வேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாடு முழுவதும் சைவத்திற்கு உயர்வும் அசைவம் உண்பவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற கருத்து நிலையின் பிரதிபலிப்பே இது!

சமீபத்தில் நடந்து முடிந்த **ஜீ 20** மாநாட்டு நிகழ்வில் உலகத் தலைவர்களுக்கு தடபுடலான விருந்து உபசாரங்களும் நடந்தது 500க்கும் மேற்பட்ட வகையில் பல்வேறு மாநிலங்களில் புகழ்பெற்ற உணவுகள் வெள்ளித் தட்டுகளில் பரிமாறப்பட்டன ஆனால் அவை அனைத்தும் சைவ உணவுகளே ஆகும். சர்வதேச அளவில் வந்த தலைவர்கள் அசைவத்தை விரும்பினால் கூட கிடைக்க விடாமல் செய்வதற்காக 'தினை நாள்' என்பதை சூசகமாக இதற்கு பயன்படுத்திக் கொண்டார் பிரதமர் மோடி.

எனவே உணவில் கூட தனது விஷமத்தனமான மதவெறி உயர் சாதி வெறியை தன்னகத்தே கொண்டதுதான் பாஜக ஆர் எஸ் எஸ் கூடாரம் என்பது விளங்கும். ஏன் உள்நாட்டு விமான பயணங்களின் போது வழங்கப்பட்டு வந்த அசைவ உணவையும் நிறுத்திய பெருமை இவர்களைத்தான் சாரும்.

**அடையாறு ஆனந்த பவன் மீது சேற்றை அள்ளி வீசும் சங்கிகள்!**

தமிழகத்தில் மிகப்பெரிய சங்கிலி தொடர் சைவ ஹோட்டல்களில் ஒன்று தான் அடையாறு ஆனந்த பவன். பல்வேறு கிளைகள் இந்த ஹோட்டலுக்கு உள்ளது.

இந்த ஹோட்டலின் உரிமையாளர் கே.டி.சீனிவாச ராஜா சமீபத்தில் யூடியூப் சேனல் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். பிரபல நடிகரான சித்ரா லஷ்மணன் தான் இந்த பேட்டியை எடுத்துள்ளார். அதில் சீனிவாச ராஜாவிடம், வெஜ் ஹோட்டல்கள் பிராமணர்கள் வசம்தான் இருந்தது என்றும் அப்புறம் எப்படி நீங்கள் வந்தீர்கள் என்றும் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த சீனிவாச ராஜா, யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பண்ணலாம் என்று மாற்றிக்காட்டியவர் தந்தை பெரியார். அவர்தான் இதற்கு காரணம் என்றும், காலம் மாறியது என்றும் அரசு ஆதரவு கிடைத்ததாகவும் பேசியுள்ளார்.

இந்த பேட்டியை பகிர்ந்துள்ள நெட்டிசன் ஒருவர், இந்துக்களின் ஒரு சமுதாயத்தின் மீது வன்மத்தை கக்கும் அடையார் ஆனந்த பவனை புறக்கணிப்போம் என்று எக்ஸ்ல் பதிவிட்டார்.

மோதிலால் என்ற ஐடியில் இருந்து வெளியிடப்பட்ட பதிவில், பிராமணர்கள் கையில் ஹோட்டல்கள் இருந்தவரை இவ்வளவு மருத்துவமனைகளுக்கு அவசியமே இல்லாமல் இருந்தது என்றும், இப்போது எவ்வளவு ஹோட்டல்கள் உள்ளதோ அதே அளவு மருத்துவமனைகளும் உருவாகியுள்ளது என்று மிகவும் வன்மத்தோடு பதிவிட்டுள்ளார்.

அத்தோடு பிராமணர் அல்லாதவர்கள் சமைக்கும் உணவு சுகாதாரமானது அல்ல என்பதையும் அது நோய் தொற்றுக்களோடு கூடிய உணவு என்பதையும் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார். என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி சிலர் அடையார் ஆனந்த பவனுக்கு எதிராக பதிவிட அதற்கு ஆதரவாகவும் பலர் பதிவிட்டு வருகின்றனர். அதில் ஒருவர், சீனிவாச ராஜா சொன்னதில் தவறில்லை என்றும், பெரியார் காலத்தில் பிராமணர் அல்லாதோர் ஓட்டல் நடத்தவோ அங்கு உட்கார்ந்து சாப்பிடவோ அனுமதி இல்லை என்றும் எழுதியுள்ளார்கள் அதோடு தந்தை பெரியார்தான் மக்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் சூழலை உருவாக்கியவர் என்று உரக்கச்சொல்வதில் என்ன பிரச்சனை? என்றும் காட்டமாக பதிவிட்டுள்ளார்கள்.

சித்ரா லட்சுமணன்தானே இந்த கேள்வியை கேட்டார் ஆனால் அவரை விட்டுவிட்டு ஏன் அடையார் ஆனந்த பவன் உரிமையாளர் மீது இப்படி வன்மத்தை ஏன் காட்டுகிறீர்கள் என்றும் சிலர் கமெண்ட் செய்து வருகின்றனர். சமீப காலமாக இப்படி யூடியூப் பேட்டியில் பேசும் பிரபலங்கள் மீது சங்கிகள் சர்ச்சையை கிளப்புவது வாடிக்கையாகி வருகிறது. டி இமானை அடுத்து இப்போது சீனிவாச ராஜாவின் பேட்டியும் படு வைரலாகி வருகிறது.

ஏற்கனவே சைவ ஓட்டல் தொழிலில் சூத்திர சரவணபவன்கள் பெரும்பங்கு வகித்ததையும் நாம் மறக்க இயலாது

இந்நிலையில் இப்போது வேறு சேலம் ஆர்.ஆர். பிரியாணி கடையின் உரிமையாளர் பக்தியையும் பெரியாரையும் ஒன்றாகத்தான் நான் பார்க்கிறேன் என்று கூறியுள்ளார். அவருக்கு என்னென்ன நடக்குமோ சங்கீகள் எப்படி கதறுவார்களோ? தெரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் நீங்கள் தடுக்க தடுக்க அலைமோதும் கூட்டத்தோடு ஆனந்த பவன்கள் நிற்கின்றன என்பதுதான் உங்களுக்கான பதிலாக மக்கள் கூற விரும்புவது. மேலும் அதிக விலை வைத்து விற்கப்படுகிறது என்றெல்லாம் பேசி வருகின்றார்கள். இப்ப பிரச்சனைகளெல்லாம் இப்போதுதான் உங்களுக்கு தெரியவந்துள்ளதா? இதற்காக எந்த போராட்டத்தையாவது நீங்கள் நடத்தியது உண்டா?

எனவே அவர்கள் திருந்தினால் நல்லது இல்லையென்றால் திருந்தும் வரை இது தொடரும்!

தொடர்புக்கு 9444481703

**முக்கிய அறிவிப்பு**

ஜனசக்திக்கு எழுதும் கட்டுரைகள் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் டைப் செய்து வேர்டு பைலில் இமெயிலில் அனுப்ப வேண்டும் வாரம் தோறும் திங்கள்கிழமைக்குள் கிடைக்க வேண்டும்.

இயக்கச் செய்திகளை டைப் செய்து, செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் ஜனசக்திக்கு கிடைக்கும் வகையில் janasakthieditor@gmail.com இமெயிலுக்கு மட்டும் அனுப்ப வேண்டும். யாருடைய வாட்ஸ்அப் எண்ணுக்கும் அனுப்பக் கூடாது.

பிரச்சார நோட்டீஸ், மனுக்கள் போன்றவற்றை அப்படியே அனுப்பக் கூடாது. அவற்றை செய்தி வடிவில் சுருக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் குறித்த தொடர்புக்கு:

**டி.எம்.மூர்த்தி**, ஆசிரியர்: **9444360869**

**த.லெனின்: 9444481703**

ஜனசக்தி சமூக ஊடகங்கள் தொடர்புக்கு:

**வ.மணிமாறன்: 9500001224**

இயக்கச் செய்திகள் குறித்த தொடர்புக்கு:

**பிரதாப் சந்திரன்: 9382679798**

ஜனசக்தி விநியோகம், சந்தா குறித்த தொடர்புக்கு:

**கே.கணேசன்: 9444331138**

ஜனசக்தி பணம் செலுத்துதல் சம்பந்தமான தொடர்புக்கு:

**இளசை கணேசன்: 8220468816**

**ஆசிரியர் குழு.**
**ஜனசக்தி**

# கார்ப்பரேட்டுகளுக்கு மோடி அரசு 'அள்ளிக் கொடுத்தது' ரூ.25 லட்சம் கோடி

நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசானது, கடந்த 9 ஆண்டுகளில் பெருமுதலாளிகளுக்கு தள்ளுபடி செய்த கடன் தொகை 25 லட்சம் கோடி ரூபாய் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன், கடந்த ஜூலை 20 துவங்கி ஆகஸ்ட் 11 வரை நடைபெற்ற நாடாளு மன்றக் கூட்டத் தொடரின்போது, இவ்வாறு பெருமுதலாளிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை 14 லட்சம் கோடி ரூபாய் என்று மோடி அரசின் நிதியமைச்சகம் கூறியிருந்தது, அப்பட்டமான பொய் என்பதும் அம்பல மாகி இருக்கிறது. பொதுவாக வங்கிகள் தொழில் நடத்துவதற்கு கடன் கொடுக்கின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படு கின்றன.

ஒன்று பிணையுடன் கூடிய கடன் (SECURED LOAN) இன்னொன்று பிணையில்லாக் கடன் (UNSECURED LOAN). சாதாரணமாக சிறு, குறு நிறுவனங் கள் கடன் கேட்டால் அதற்கு எந்த சொத்தை ஈடாக தருகிறீர்கள்.. என்று கேட்டு, அந்த சொத்தின் மதிப்பு அடிப் படையிலேயே வங்கிகள் கடன்களை வழங்குகின்றன. நாளை ஏதேனும் கார ணங்களால் அந்த கடனைக் கட்ட முடி யாவிட்டால் ஈடு வைக்கப்பட்ட சொத்தி னை ஜப்தி செய்து ஏலம் விட்டு அதில் வரும் பணத்தின் மூலம் அந்த கடன் தொகையில் வரவு வைப்பார்கள்.

இவ்வாறு சிறு, குறு, நடுத்தரத் தொழில் முனைவோர் பலர் தங்களின் சொத்துக் களை ஜப்தியில் இழந்திருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு பிணை எதுவும் இல்லாமல் பல ஆயிரம் கோடி கடன் பெற்ற பெருமுதலாளிகள், அந்தக் கட னைத் திருப்பிச் செலுத்துவதும் இல்லை இவர்கள் ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர்கள் என்பதால் வங்கிகளும் அவர்களை நெருக்கிப் பிடித்து கடன்களை வசூலிக்க முடிவது மில்லை. ஒரு கட்டத்தில் அந்தக் கடன் கள் வராக்கடன்கள் ஆக்கப்பட்டு ஆட்சி யாளர்களின் ஆசியுடன் தள்ளுபடி செய்யப்பட்டு விடும்.

இவ்வாறு தள்ளுபடி செய்யும் பணம் அனைத்தும் வங்கிகளுக்குச் சொந்தமானவை அல்ல. அவை, 140 கோடி இந்திய மக்களும் அன்றாடம் பல்வேறு வகைகளில் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிப்பணம். அவை மோடி அரசால், பெருமுதலாளிகளுக்கு அநாமதேயமாக அள்ளி வீசப்பட்டு வருகிறது. இப்படி பிணையில்லாக் கடன்களை வாங்கி, மோசடி செய்தவர்களின் பட்டியலைக் கேட்டால், அது 'இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்திற்கு எதிரானது' என்று நாடாளுமன்றத்திலேயே பதிலளித்து, 'முதலாளிகளைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்' என்று, ராஜவிசுவாசத்தை காட்டினார் நிதியமைச்சர்.

எனினும், கடந்த ஜூலை 20 துவங்கி ஆகஸ்ட் 11 வரை நடைபெற்ற நாடாளு மன்ற மழைக்காலக் கூட்டத்தொட ரின்போது, தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை மட்டும் எவ்வளவு என்று மோடி அரசு கூறியது. 07.08.2023 அன்று திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, வராக்கடன் தள்ளுபடி குறித்து எழுப்பிய கேள்விக்குப் (கேள்வி எண் 2983) பதிலளித்த ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் டாக்டர் பகவத் காரத், "கடந்த ஒன்பது நிதி ஆண்டு களில், 14 லட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வாராக் கடன்களை வங்கிகள் தள்ளுபடி செய்துள்ளன" என்று கூறியிருந்தார். மொத்தத் தொகையில் கார்ப்பரேட் தொழில்கள் மற்றும் சேவை களுக்கான கடன் தள்ளுபடி மட்டும் 7 லட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாய் என்று கூறியிருந்தார். இதுவே அப்போது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அவ்வாறிருக்கையில் முதலாளிகளுக்கு மட்டும் 14.56 லட்சம் கோடி ரூபாயை எப்படி தள்ளுபடி செய்ய முடிந்தது? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. இந்நிலையில்தான், தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகை ரூ.14 லட்சத்து 56 ஆயிரம் கோடியல்ல. அதை விடவும் அதிகம். சுமார் 25 லட்சம் கோடி கடனை மோடி அரசு தள்ளுபடி செய்துள்ளது, என்ற அதிர்ச்சிகரமான உண்மை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

### உண்மை விபரம் தந்த ரிசர்வ் வங்கி

கேரள மாநிலம் ஆழப்புழையில் பிறந்தவர் சஞ்சய் ஈழவா. குஜராத் மாநிலத்தில் வசிக்கும் இவர், ஒரு சமூக செயற்பாட்டாளர் ஆவார். அவர், 'கடந்த 9 ஆண்டுகளில் தள்ளுபடி செய் யப்பட்ட வராக்கடன்கள் எவ்வளவு?' என்று தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அக்டோபர் 11 அன்று பதிலளித்து ள்ளது. அதில், கடந்த 9 ஆண்டுகளில் தனியார் முதலாளிகளுக்கு மோடி அரசு கடன் கொடுத்து, வராக்கடன் எனும் பெயரில் தள்ளுபடி செய்த தொகை மட்டுமே ரூ. 25 லட்சம் கோடிகள் என்ற அதிர்ச்சிகரமான உண்மை தெரியவந்து ள்ளது. (அட்டவணையில்) சராசரியாக ஆண்டுக்கு 2.5 லட்சம் கோடி ரூபாய்களை, வராக்கடன் என்று கூறி மோடி அரசு தள்ளுபடி செய்து, முதலாளிகளை மனம் குளிரச் செய்துள்ளது. இதில், 202324 நிதியாண்டிற் கான வராக்கடன் சேர்க்கப்படவில்லை.

இது 9 ஆண்டுகளுக்கான கணக்கு மட்டுமே ஆகும். 2014 ஆம் ஆண்டு மே மாதம், தொடர்ச்சி 9ஆம் பக்கம்



அருண் நெடுஞ்செழியன்

# இஸ்ரோவின் வி
# பாஜக அ

ஆர்.எஸ்.எஸ், பாஜக தலைவர்களின் வரலாற்று அறிவுக்கு அறிவியல் விளக்கமும் இருக்காது; ஆதாரமும் இருக்காது. அது பற்றி அவர்கள் அக்கறைப்படுவதும் இல்லை. மாறாக அவர்களின் 'வரலாற்றுக் கூற்று' அரசியல் திட்டத்துடன் தொடர்புடைய ஊகமாக இருக்கும். அதை நிலைநிறுத்த, கால நிர்ணயத்தை வெற்று ஊகமாக மாற்றுவார்கள். இதைத்தான் இஸ்ரோவின் விண்வெளி சாதனையிலும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நிலவின் தென்துருவத்தில் முதன்முதலாக ஆய்வுக்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய சந்திரயான்3 திட்ட வெற்றியானது, சர்வதேச அளவில் இஸ்ரோவுக்கும் இந்தியாவுக்கும் பெரும் மதிப்பையும் பெருமையையும் தேடித் தந்துள்ளது. சந்திரயான் வெற்றியை அடுத்து, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புகிற ககன்யான் திட்டத்தை வேகப்படுத்திவரும் இஸ்ரோ, விண்வெளிக்கு மனிதர்களை சுமந்து செல்கிற ஏவூர்திகளை பரிசோதனை செய்து வருகிறது. சில நாட்களுக்கு முன்பு அவசரகாலத்தில் ஏவூர்தியில் இருந்து மனிதர்கள் தப்பிப்பதற்கான இஸ்ரோ ஆய்வுக்குழு, தப்பிக்கும் அமைப்பு சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது. தோராயமாக இன்னும் 30 பரிசோதனைகளை செய்துவிட்டால், விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கான அனைத்து சோதனை ஓட்டங்களையும் இஸ்ரோ நிறைவுசெய்துவிடும். அத்தகைய நாள் வெகு தொலைவில் இல்லை!

இப்படி இஸ்ரோ அறிவியலாளர்கள் விண்வெளி ஆய்வில் அர்ப்பணிப்புடன் தொடர் உழைப்பில் ஈடுபட்டு வரும் நிலையில், "நாங்கலெல்லாம் அப்பவே விண்வெளிக்குப் போய்ட்டோம், அப்பவே விமானம் விட்டோம்" என நவீன அறிவியலை இழிவு செய்கிற வகையில் நூல்களை எழுதி, மாணவ சமுதாயத்தையே முட்டாளாக்க முயற்சிக்கிறது மோடி அரசு.

சந்திரயான் வெற்றியைத் தொடர்ந்து மாணவர்களிடம் விண்வெளி ஆர்வத்தை தூண்டும் வகையில், அண்மையில் 'சந்திரயான் உத்சவ்' என்ற பேரில் பாடப் புத்தகங்களை தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் (NCERT) வழங்கியது. இந்தப் புத்தகத்தை இஸ்ரோவின் தலைவர் சோமநாத் அவர்களும் ஒன்றிய அரசின் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களும் வெளியிட்டனர்.

இந்த நூலின் 17 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது வருமாறு: "இந்த அறிவியல் சாதனைகள் இப்போது மட்டுமா சாத்தியமாகியுள்ளது? கடந்த காலத்தில் இந்த சாதனைகள் நடைபெறவில்லையா? நமது முன்னோர்கள் இது பற்றி சிந்திக்காமலா இருந்திருப்பார்கள்? நமது இலக்கியத்தில் பின்னோக்கிப் பார்த்தால், 'விமானிகா சாஸ்த்ரா' என்ற விமான தொழில்நுட்ப நூலில், விமான தொழில்நுட்ப அறிவியல் குறித்தும், பறக்கும் விமானம் குறித்தும் பல தகவல்கள் உள்ளதை காண முடிகிறது. எஞ்சின் வடிவமைப்பு முதல் ராக்கெட் தொழில்நுட்பம் வரை நமது பழைய புராண இலக்கியங்களில் விளக்கங்கள் உள்ளன" என்று இந்தக் கதை நீள்கிறது.


ஆனால், "இப்படிச் சொல்வதற்கு எந்தவொரு சான்றும் இல்லை" என இஸ்ரோ முன்னாள் தலைவர் மாதவன் நாயர் உறுதிபடக் கூறுகிறார். என்.சி.இ.ஆர்.டி கூறியிருப்பது பற்றி ஆய்வு செய்த இந்திய அறிவியல் கழகம், "விமானத்தின் இயக்கமானது நியூட்டன் விதிப்படிதான் இயங்குகிறது. கடந்த காலத்தில் இப்படி விமானம் ஓட்டுவதற்கான வாய்ப்பு இல்லை" என்கிறது. மேலும் "விமானிகா சாஸ்த்ரா என்ற நூல் மிக அண்மையில் 1923 ஆண்டு சுப்ராய சாஸ்திரி என்பவரால் எழுதப்பட்டது" என்கிறது.

இப்படி அண்மைய அறிவியல் யுகத்தில் எழுதப்பட்ட ஒரு நூலை வைத்துக் கொண்டு இதிகாச புராண கட்டுக்கதைகளை நிஜம் என்று காட்டி, தங்களது வலது இந்துத்துவ அரசியலுக்கு மாணவர்களின் விண்வெளி ஆர்வத்தை மடைமாற்றும் கேவலமான, அற்பமான வேலையை ஆர்.எஸ்.எஸ் பாஜக மேற்கொண்டு வருகிறது. தங்களின் பதவியை காப்பாற்றிக் கொள்ள பாஜக முன்னெடுக்கும் இந்த புராண, இதிகாச கட்டுக்கதைகளுக்கு இஸ்ரோ தலைவர் சோமநாத்தும் தலையாட்டுவது, இஸ்ரோவுக்கே மிகப்பெரிய அவமானம் ஆகும். இந்துத்துவ கட்டுக்கதைகளுக்கு இஸ்ரோவை பலிகடா ஆக்குவதுதான் கொடுமையிலும் கொடுமை!



சில மாதங்களுக்கு முன்பு எர்ணாகுளத்தில் நடந்த பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கேரள சட்டப்பேரவை சபாநாயகர் ஏ.என்.ஷம்சீர் அவர்கள் "விமானத்தை கண்டுபிடித்தது யார்? என்று என்னைக் கேட்டால், நான் ரைட் சகோதரர்கள் என்று பதில் அளிப்பேன். ஆனால் இந்துத்துவ நம்பிக்கையாளர்கள், உலகின் முதல் விமானம் புஷ்பக விமானம் என்பார்கள். கல்வித்துறையில் இதுபோன்ற கட்டுக்கதைகளுக்குப் பதிலாக நாம் அறிவியலை ஊக்குவிக்க வேண்டும்" என்று எடுத்துரைத்தார்.

இவரது பேச்சால் எரிச்சலடைந்த பாஜகவினர்,






இந்துக்களின் நம்பிக்கைகளுக்கு எதிரான கருத்து என்று சபாநாயகர் ஷம்சீர் மீது போலீசில் புகார் அளித்துள்ளனர்.

### ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வரலாற்று அறிவு:

அறிவுக்கும் அறிவியலுக்கும் சற்றும் பொருத்தமற்ற கூட்டம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினால் என்ன நடக்கும்? என்பதற்கு நாம் வாழும் காலமே சிறந்த உதாரணம் ஆகும். ஆனால் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வரலாற்று அறிவானது அரசியல் திட்டத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அரசியல் திட்டம், ராம ராஜ்ஜியம் என்ற பெயரில் ஒரு மத அடிப்படைவாத நாட்டை நிறுவுவது. அரசியல் சட்டத்திற்குப் பதிலாக மனு சட்டத்தை அமல்படுத்துவது. மத சிறுபான்மை யினரை இந்துமதத்தில் அடக்குவது. இந்த அரசியல் திட்டத்திற்கு உகந்தவாறு வரலாற்றைக் கட்டமைக்கும் அறிவு ஆர்.எஸ்.எஸ் தலைவர்களுக்கு உண்டு.

ஆர்.எஸ்.எஸ் தலைவர்களின் வரலாற்று அறிவுக்கு, அறிவியல் விளக்கமும் இருக்காது. ஆதாரமும் இருக்காது. முடிந்த மட்டும் அவர்களின் கட்டுக்கதைகளை காலத்திற்குப் பிந்தி தள்ளுவது, முடிந்தால் காலத்திற்கு வெளியே தள்ளுவது என்பதே வரலாற்றை திரிப்பதற்கு ஆர்.எஸ். எஸ் தேர்ந்தெடுத்திருக்கும் முக்கிய உத்திகளில் ஒன்றாகும். உதாரணமாக வேத காலம், மகாபாரத போர் நடந்த காலம்(புனைவாக), சரஸ்வதி ஆறு, ராம ராஜ்ஜியம் என வரலாற்றுக் காலத்திற்கு பின்தள்ளுவதும் பழமையிலும் பழமை என இட்டுக் கட்டுவதும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வரலாற்றுப்

# ிண்வெளி சாதனையும் றிவியல் புரட்டும்

பார்வையாகும்.

எனவேதான் சிந்துவெளி நாகரிகம், கீழடி நாகரிகம் போன்ற மானுட குலத்தின் மெய்யான நாகரிக சான்றுகள் குறித்து ஆர்.எஸ்.எஸ் கூட்டம் ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில் தொல்லியல் சான்றுகள் வரலாற்றின் காலக் கண்ணாடி ஆகி விடும் இல்லையா? பின்னர் வேத காலம் என்று பசப்ப முடியாது அல்லவா?

இந்தக் கும்பலிடம் வேத காலம் எது? என்று கேட்டால் தெரியாது. மகாபாரதப் போர் காலகட்டம் கேட்டால் தெரியாது. தோராயமாக 50 ஆயிரம், ஒரு லட்சம் ஆண்டுகள் என்பார்கள். (மகாபாரதப் போரில் கூறப்பட்டுள்ள போர் வீரர்கள் எண்ணிக்கை போன்றவை வெற்றுப் பொய்கள் என டி.டி.கோசம்பி, பண்டைய இந்திய வரலாற்று நூலில் சிறப்பாக விளக்கியிருப்பார்.) ஏனென்றால், குறிப்பான வரலாற்றுக் காலத்தை வரையறுத்தால், அந்தக் காலகட்டத்தின் உற்பத்தி உறவு வளர்ச்சி மற்றும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிகளைக் கொண்டு, தொல்லியல் சான்றுகள் மூலம் ஆர்.எஸ்.எஸ் தர்க்கத்தை அறிவியல் பூர்வமாக தகர்த்துவிட முடியும் அல்லவா.

வரலாற்றை வெற்று ஊகமும் பொய்யும் புனைவுமாக கட்டமைப்பதில் ஆர்.எஸ்.எஸ் கும்பல் கற்றுக் கரைதேர்ந்துள்ளது. ஆர்.எஸ்.எஸ் பாஜக சங்கிகள் உதித்த அறிவியல் முத்துக்கள் சில..

- திருதராஷ்டிரனுக்கு கண் இல்லை. ஆனாலும் செயற்கைக்கோள், இணையம் உதவியுடன் அவர் மகாபாரதத்தை பார்த்தார் (திரிபுரா




முதலமைச்சர் கூறியது).
- வரும் காலத்தில் கணினி மொழியாக சமஸ்கிருதமே இருக்கும் (ஒன்றிய திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கூறியது)
- நாமனைவரும் ரிஷிகளின் குழந்தைகள், குரங்குகளின் குழந்தைகள் அல்ல. ஆகவே டார்வினின் கோட்பாடு தவறாகும் (ஒன்றிய உயர்கல்வித்துறை அமைச்சர் சத்யபால் சிங்)
- பசு பக்கத்தில் நின்றால் காச நோய் குணமாகும்.
- இராமாயண காலத்தில் பறக்கும் விமானம் இருந்தது.
- டைனோசர் அழிந்தது பிரம்மனுக்கு மட்டும்தான் தெரியும்.
- கழுதை மூத்திரம் கொண்டு விமானங்கள் இயக்கப்பட்டன.
- நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்றோர் அறிவியலாளர்கள் கிடையாது; ரிஷிகள், முனிவர்களே அறிவியலாளர்கள்.

மேற்கூறியவை சொற்பமான, சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இவர்கள் கூறியதை பட்டியலிட்டால் தனிப் புத்தகமாகவே போடலாம்!

இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக விநாயகக் கடவுளின் மனித உடலும் யானைத் தலையும் கொண்ட சிலை, நவீன பிளாஸ்டிக் சர்ஜரிக்கு முன்னோட்டம் என்ற பிரதமர் மோடியின் புகழ்பெற்ற வாசகத்தை நினைவு கூறவேண்டும்.

என்ன கொடுமை என்றால், எகிப்திய நாகரிகத்திலும் பழமையான மெசபடோமியா நாகரிகத்திலும் மனித உடல், மிருகத் தலை சிற்பங்களை சர்வ சாதரணமாக காணலாம். முதலைத் தலை, மனித உடல் கொண்டு வரையப்பட்டுள்ள எகிப்திய ஓவியங்கள், சிற்பங்கள்; மனித உடல் மற்றும் சிங்க உடல் கொண்ட புகழ் பெற்ற ஸ்பின்ஸ் சிற்பம் ஆகியவை பண்டைய மனிதர்களின் அழகான கற்பனை ஊற்றின் வெளிப்பாடு. இந்த கற்பனையை அந்தக் காலத்து பிளாஸ்டிக் சர்ஜரி என விதந்து பேசுகிற பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ் வார்ப்பு என்பதை நாம் மறந்திடக் கூடாது.

### இந்துத்துவ பாசிசமும் மாயாவாதமும்:

வரலாற்றைக் கட்டமைப்பதில் பாசிஸ்ட்கள் எப்போதும் மாயாவாதத்தை தங்களது பயன்பாட்டு தத்துவமாக்கிக் கொள்வார்கள். இனப் பெருமை, பழம் பெருமை மீட்புவாதம், ஆன்மீக வித்தைகள் போன்ற அறியாமைகளை விதந்தோதி மக்களிடத்தில் பெருமைப்படுத்துவதுதான் மாயாவாதம்.

இட்லரின் ஆரிய கலாச்சார புத்துயிர்ப்புக்கும் ஆர்.எஸ்.எஸ்.சின் ஆரிய இந்துராஷ்டிர புத்துயிர்ப்புக்கும் கடந்த காலம் குறித்த கற்பனைகளை மக்களிடம் விதைத்தது தான். பாசிசத்தின் மாயாவாதமானது இனவாதத்தையோ மதவாதத்தையோ தனது கருத்தியல் ஆயுதமாக்கிக் கொள்கிறது.

தொகுத்துக் கூறின், உலக வாழ்வின் புறவய உண்மைகளை மறுப்பதும் அதற்கு அகநிலையான கற்பனை, நம்பிக்கை பாற்பட்ட கருத்துக்களைக் கூறி மேன்மைப்படுத்துவதும் பாசிசத்தின் பொதுப் பண்பாக உள்ளது. புறநிலை உலகை பகுத்தறிவின் துணைகொண்டு அணுகாமல் நம்பிக்கை எனும் அகநிலைவாதத்தால் விளக்கப்படுத்துவது பாசிச கருத்துகளுக்கு அடித்தளத்தை வழங்குகின்றன.

எனவேதான் பாசிச சிந்தனைகள், அறிவியல்பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்ட உண்மைகளுக்கு எதிராக உள்ளன. மானுடவியல் துறைக்கோ, பரிணாமக் கோட்பாட்டிற்கோ நேரெதிராக உள்ளன.

பிரபஞ்சம், உலகம் குறித்த அறிவியல் பூர்வ உண்மைகள் ஆன்மீக வித்தைகளுக்கும் கடவுள்களுக்கும் இன்ன பிற விண்ணுலக அதிசய கற்பனைகளுக்கும் எதிராக உள்ளது. ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள் டார்வினியத்தை ஏற்றுக் கொள்ளாததன் காரணமும் இதுதான்! பாசிசத்தின் அனைத்து அகநிலைவாத கருத்துக்களும் (இனவாதம், மதவாதம் உள்ளிட்ட) மூடநம்பிக்கைகளின் ஒட்டுமொத்த குப்பை கூலங்களாகும்.

இந்தியாவில் மூட நம்பிக்கைகள், புனிதங்கள் உள்ளிட்ட அகநிலை கருத்துகளால் உந்தப்படுகிற மத அடிப்படை வாதம், ஐரோப்பாவைக் காட்டிலும் பல மடங்கு வீரியத்துடன், சமூகத்தின் அன்றாட பொருளாதார பண்பாட்டு உறவுகளில் ஊடுருவி உள்ளது. சமூகத்தில் புரையோடியுள்ள நால்வர்ணக் கோட்பாடு, மக்களின் கால்களில் கட்டிய சங்கிலியாக நகர விடாமல் கட்டுப்படுத்தி வருகிறது. இந்தியாவில் அரசும் மதமும் பிண்ணிப் பிணைந்தே உள்ளது.

நவீன இந்தியாவின் பிரசவமே மதப் பிரிவினையில் தொடங்கி, மகாத்மா காந்தி படுகொலையில் தொடர்ந்து, சீக்கிய கலவரங்களில் வளர்ந்து, பாபர் மசூதி இடிப்பில் நெருப்பாய் எழுந்து, இன்று காஷ்மீர் ஒடுக்குமுறை, இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள், பழங்குடிகள், முற்போக்காளர்கள் மீதான தாக்குதல்கள் வரை பற்றி எரிகிறது.

தற்போதைய பாஜக ஆட்சியில் இஸ்ரோவின் சாதனைகளை மோடியின் சாதனை போல விளம்பரப்படுத்துவதை காண முடிகிறது. பொதுவாக நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தங்களின் கைகளில் குவித்துக் கொண்டுள்ள சர்வாதிகாரிகள், மன்னர்கள் நாட்டில் நடைபெறுகிற அனைத்து வரலாற்று பெருமைகளுக்கும் உரிமை கொண்டாடி தன்வயப்படுத்திக் கொள்ள முயல்வார்கள். இதன் மூலம் தமது ஆட்சியில்தான் எல்லாம் நிகழ்ந்தது என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி, தமது பெயரையும் புகழையும் மேலும் பெரிதுபடுத்திக்கொள்ள முயல்வார்கள். மோடி கும்பலும் அதையேதான் செய்து வருகிறது.

அவற்றுடன் தங்களது இந்துத்துவ சித்தாந்தத்தையும் சேர்த்துக் கொள்கிறது. நிலவின் தென்துருவத்தில் லேண்டர் தரையிறங்கிய இடத்தை “சிவசக்தி பாய்ண்ட்” என மோடி அறிவித்தது முதல் தற்போது என்.சி.இ.ஆர்.டி நூலில் புராண இதிகாச கட்டுக்கதைகளை இணைப்பது வரை அனைத்தும் இந்தத் திட்டத்தின் அங்கம்தான்.

(தொடர்புக்கு: 9842391963)

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு

## தேர்தல் கமிஷன் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்பு



வாக்காளர்பட்டியல்சரிபார்த்தல், புதிய வாக்காளர்களை சேர்த்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தலைமை தேர்தல் ஆணையரால் இன்று (25.10.2023) நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு







.வீரபாண்டியன் மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜி .ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1. ஜனவரி 31 யை, தகுதி ஏற்பு இறுதி நாளாக நிர்ணயித்து புதிய இளம் வாக்காளர்களை சேர்க்க வேண்டும்.
2. இளம் வாக்காளர்களை பட்டியலில் சேர்த்தல், வாக்களர் பட்டியலில் உள்ள குறைபாடுகளை சரிசெய்தல் குறித்த விவரங்களை விளம்பரப் படுத்த வேண்டும்.
3. இறந்து போனவர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.
4. வாக்குச் சாவடிகள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.
5. சட்டமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளையும், தேர்தல் ஆணைய ஆலோசனை கூட்டங்களுக்கு அழைக்க வேண்டும்.
6. இந்திரஜித் குப்தா தலைமையிலான தேர்தல் சீர்திருத்தக் குழு அளித்த பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்த வேண்டும்.

உள்ளிட்ட கருத்துக்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

மோடி பிரதமரானபோது, பெட்ரோல் மீது லிட்டருக்கு 9 ரூபாய் 20 காசுகளாகவும், டீசலுக்கு 3 ரூபாய் 46 காசுகளாகவும் இருந்த கலால் வரியை, மோடி அரசு பெட்ரோல் லிட்டருக்கு 27 ரூபாய் 90 காசு களாகவும், டீசல் லிட்டருக்கு 21 ரூபாய் 80 காசுகளாகவும் உயர்த்தியது. இதன் மூலம் 2014 முதல் 2022 வரையிலான 8 ஆண்டுகளில் மட்டும் மோடி அரசு இந்திய மக்களிடமிருந்து ரூ. 26 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வரி என்ற பெயரில் வசூலித்துள்ளதாக புள்ளி விவரங்கள் வெளியாகின.

அவ்வாறு இந்திய மக்களை வரிகள் மூலம் கசக்கிப் பிழிந்த மோடி அரசு, அவற்றை கார்ப்பரேட் முதலாளி களுக்கு கடனாக தூக்கிக் கொடுத்து, தற்போது அந்த கடன்களை ரூ. 24 லட்சத்து 95 ஆயிரத்து 80 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்திருப்பது, இந்திய மக்கள் மீதான மிகப்பெரிய கொள்ளையாக அமைந்துள்ளது. உண்மை இவ்வாறிருக்கையில், ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் டாக்டர் பகவத் காரத், 25 லட்சம் கோடி ரூபாய் கடனை, வெறும் 14 லட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாயாக குறைத்துக் காட்டியது, நாட்டை நாடாளு மன்றத்தை தவறாக வழிநடத்துவது ஆகாதா என்ற கேள்வியை எழுப்பி யுள்ளது.

மேலும், கார்ப்பரேட் முதலாளி களுக்கு சேவகம் செய்வதற்காக எந்த அளவிற்கும் பொய்யிலும் புரட்டிலும் மோடி அரசு புரண்டெழும் என்பதற்கு வராக்கடன் தள்ளுபடி விவகாரம் மற்று மொரு உதாரணமாக அமைந்திருக்கிறது.

**சமூக ஆர்வலர் ஆர்.எம்.பாபு அளித்த விபரங்களுடன்**

# துலுக்கர்பட்டி அகழ்வாய்வு



சுந்தரசோழன்

**தமிழ்நாடு அள்ள அள்ளக் குறையாததொரு தொல்லியல் சுரங்கம் ஆகும். தமிழர்களின் மகத்தான வரலாற்றைச் செருக்குடன் பறைசாற்றும் தொல்லியல் தடங்கள் தமிழக மண்ணில் திசையெட்டும் பரவிக் கிடக்கின்றன.**






தமிழர்களுக்குத் தமது வரலாற்றை அறிவது குறித்து எப்போதுமே பேராவல் உண்டு. பண்டைய வரலாற்றை அறிவதற்குத் தொல்லியல் ஆய்வுகள் எனப்படும் அகழ்வாய்வுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இருப்பினும் பல்வேறு காரணங்களால் தமிழ் நாட்டு மண்ணில் அதன் பெருமைக்கு உரிய அளவில் மிகப் பெரும் ஆய்வுகள் எதுவும் பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. ஒன்றிய அரசு இதற்கு முக்கியத்துவம் அளித்துப் போதுமான நிதி ஒதுக்கி உதவவில்லை என்பதும் முக்கிய காரணம்.

அண்மையில் கீழடி அகழ்வாய்வு முடிவுகள் வெளியாகித் தமிழ்நாடு மட்டுமின்றி உலகெங்கும் உள்ள வரலாற்று ஆர்வம் கொண்ட தமிழர்களைப் பெருமிதத்தில் திளைக்க வைத்துள்ளது. ஒன்றிய பாஜக அரசு கீழடி உள்ளிட்ட பல தமிழகத் தொல்லியல் தடங்களில் ஆய்வுகளுக்கு முட்டுக் கட்டை போட நினைத்தாலும், மாநிலத்தில் திமுக அரசு பதவியேற்ற பின்னர் இந்த ஆய்வுகள் ஓரளவு முக்கியத்துவம் பெறத்துவங்கின.

அந்த வகையில் அண்மையில் நடைபெற்ற, இன்னமும் தொடர்ந்து நடைபெற்று வரும் தொல்லியல் அகழ்வாய்வு காரணமாக கவனத்தை ஈர்க்கிறது துலுக்கர்பட்டி தொல்லியல் களம்.

திருநெல்வேலி மாவட்டத்தின் ராதாபுரம் தாலுகாவில் பாயும் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளன துலுக்கர்பட்டி, கண்ணநல்லூர் மற்றும் பணகுடி ஆகிய ஊர்கள். இங்கு மார்ச் 2022ல் தமிழ்நாடு தொல்லியல் துறை தொல்லியல் அகழ்வாய்வுப் பணிகளைத் தொடங்கியது.

அதற்கு முன்னதாக, 2010ஆம் ஆண்டு நம்பியாற்றின் கரையில் அமைந்துள்ள ராஜக்கமங்கலம் என்னுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் சுண்ணாம்புப் பூச்சுடன் கூடிய செங்கல் கட்டுமானங்கள், கற்சிலைகள் மற்றும் அரைசாந்து உருவங்கள் (stucco images) போன்றவை கிடைக்கப் பெற்றதை அடுத்து, பல தொல்லியல் சான்றுகளைக் கொண்ட துலுக்கர்பட்டியை நோக்கி ஆய்வாளர்களின் கவனம் திரும்பியது. ஆனால் பின்னர் ராஜக்கமங்கலம் அகழ்வாய்வு பற்றிப் அதிகத் தகவல்கள் வெளிவரவில்லை.

நம்பி ஆற்றின் கரையை ஒட்டி சுமார் 36 ஏக்கர் பரப்பளவிலான பகுதியில் கருப்புப் பாண்டங்கள், சிவப்புப் பாண்டங்கள் மற்றும் கருப்புசிவப்புப் பாண்டங்கள் மற்றும் முதுமக்கள் தாழிகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டன. பின்னர் அந்த 36 ஏக்கர் பரப்பளவிலான பகுதியில் அகழ்வாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டது. நம்பியாற்றின் படுகையில் விளாங்காடு என்றழைக்கப்படும் வாழ்வியல் மேடு அமைந்துள்ள பகுதியில் 2021ஆம் ஆண்டு அகழ்வாய்வு தொடங்கப்பட்டது. தேவை ஏற்படின் அகழ்வாய்வு நடத்தப்படும் பரப்பு விரிவாக்கப்படும் என்று அகழ்வாய்வைத் தொடங்கி வைத்த அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

அங்கு நடத்தப்பட்ட முதல் கட்ட அகழ்வாய்வில் குவளைகள், பாசி மணிகள், ஓடுகள், பீங்கான் பாண்டங்கள், இரும்புப் பொருட்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

துலுக்கர்பட்டியை ஒட்டியுள்ள கண்ணநல்லூர் மற்றும் பணகுடி போன்ற இடங்களிலும் முதுமக்கள் தாழிகளின் எச்சங்கள் போன்றவை கிடைத்தன.

ஏப்ரல் 2023 முதல் தமிழ்நாடு தொல்லியல் துறை துலுக்கர்பட்டியில் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுகளைத் தொடங்கியது. எட்டு குழிகளில் நடத்தப் பட்ட இந்த அகழ்வாய்வில் முதலில் புலி என்ற தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆய்வுகளில், தமிழி எழுத்துகளில் குவிர(ன்), திஈய, திச ஆகிய எழுத்துகள் பொறிக்கப்பட்ட தொன்மை மிகுந்த பானை ஓடுகள் கிடைத்தன.


இவ்வெழுத்துகள் அநேகமாக அந்தப் பானைகளின் உரிமையாளர்களின் பெயரைக் குறிப்பதாக இருக்கக் கூடும். துலுக்கர்பட்டியில் வாழ்ந்த மக்கள் எழுத்தறிவு பெற்ற சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. கீழடியில் கிடைத்த பானை ஓடுகளிலும் குவிர(ன்) என்ற எழுத்துகள் கிடைத்துள்ளது இந்தத் தருணத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் சதுரங்கம் விளையாடப் பயன்படுத்தும் சுடுமண்ணாலான காய்கள், காதணிகள், செம்பு மோதிரம், ஈட்டி முனை, பாசிகள், கவண் கல், எலும்புகள், இரும்புப் பொருட்கள், வெண்மை நிறத்தில் அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள், கண்ணுக்கு மைதீட்டும் செம்புக் கருவி, செம்பு அணிகலன்கள் மற்றும் கூரை வீடுகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளிட்ட 1900க்கும் மேலான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.


இவை மட்டுமின்றி, மூன்று இரும்பு உருக்கு உலைகளங்கள், இரும்பு தாதுப் பொருட்கள், இரும்புக் கசடு, ஊதுலைக் குழாய், இரும்பு உளி உள்ளிட்ட பல ஆர்வமூட்டும் தொல்லியல் சான்றுகளும் இந்த இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இவை சுமார் 2400 ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.











இருப்பினும் இந்தச் சான்றுகளை முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தினால் மட்டுமே அவற்றின் காலத்தை ஐயத்திற்கு அப்பாற்பட்ட வகையில் உறுதி செய்ய முடியும். இருப்பினும் துலுக்கர்பட்டி மக்கள் இரும்பின் பயன்பாட்டை அறிந்திருந்தனர் என்பது வரலாற்று ரீதியாக அது மிகுந்த முக்கியத்துவம் உடையதும் கூட.

தொல்லியல் மற்றும் வரலாற்று நோக்கில் பார்க்கின், இரும்பின் பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகம், அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிப் பயணித்ததைக் குறிப்பதாகும். இரும்பை உருக்கக் கற்றுக் கொண்ட மக்கள், இரும்பிலான உற்பத்திக் கருவிகளையும் போர்க்கருவிகளையும் உருவாக்கிப் பயன்படுத்துவது, விவசாயத்துறையிலும் உற்பத்தியின் அனைத்துத் துறைகளிலும் மட்டுமின்றி போர்க்கலையிலும் பெருத்த மாற்றத்தைக் கொண்டு வரும்.

இரும்பின் பயன்பாட்டை அறிந்த மக்களால் மட்டுமே அடர்ந்த காடுகளை அழித்து, நிலத்தை விவசாயப் பயன்பாட்டுக்குக் கொண்டு வர முடியும். அது போலவே, இரும்பினால் செய்யப்பட்ட கொழுமுனைகள், கதிர் அறுக்கும் கருவிகள் போன்றவை விவசாயத்தை அதிகப் பயனளிப்பதாக மாற்றியமைக்கும். புதிய வாழ்க்கைத் தொழிலை மேற்கொள்ளும் ஒரு மக்கள் கூட்டத்தையும் உருவாக்கும்.

இவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பானது அன்றைய மக்கள் சமூகத்தின் மீதும், அவர்களது வாழ்க்கை முறை மீதும் உறுதியான தாக்கத்தைச் செலுத்தும், அது அன்றைய தொல்லியல் எச்சங்களின் மூலம் வெளிப்படும். மேற்கண்ட காரணங்களால் தான் பண்டைய சமூகங்கள் இரும்பின் பயன்பாட்டை அறிந்திருப்பது குறித்து ஆய்வாளர்கள் அதிகக் கவனம் செலுத்துவார்கள்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் கி.மு. ஆயிரம் ஆண்டு அளவில்தான் இரும்பு யுகம் துவங்கியது என்பது வெகு காலமாக ஆய்வாளர்கள் கொண்டுள்ள பொதுவான கருத்தாகும். ஆனால் அண்மைக் காலங்களில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் இந்த முடிவினைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளன.

குறிப்பாகத் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள மயிலாடும் பாறையில் கிடைத்த தொல்லியல் பொருட்கள் மீது செய்யப்பட்ட காலக் கணிப்பு பரிசோதனைகளின் படி, தமிழ்நாட்டில் 4200 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பு பயன்படுத்தப் பட்டது தெரியவந்துள்ளதாக தமிழ்நாடு தொல்லியல் துறை ஏற்கனவே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் பொற்பனைக் கோட்டைப் பகுதியில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளிலும் இரும்பு உருக்கு உலைகள், மற்றும் இரும்பின் பயன்பாட்டைப் பறைசாற்றும் சான்றுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. அதன் தொடர்ச்சியாக தற்போது துலுக்கர்பட்டியிலும் இரும்பு உருக்கு உலைக்களங்கள் போன்றவை கிடைத்துள்ளது. பண்டைத் தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு மிகப் பரவலாக அறியப்பட்டதாக இருந்தது என்பதை உறுதி செய்கிறது.

துலுக்கர்பட்டியில் தொடர்ந்து நடைபெறும் அகழ்வாய்வுகள் இது போன்ற இன்னும் பல பயனுள்ள வரலாற்றுத் தகவல்களை வெளிக்கொணரும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

அத்தகைய சான்றுகளை உரிய காலக்கணிப்புப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி உரிய முடிவுகளைப் பெற வேண்டியது தமிழ்நாட்டு அரசின் அத்தியாவசியக் கடமையாகும். அதற்குத் தேவையான ஆதரவும் அழுத்தமும் தருவதற்கு அகழ்வுசார் மற்றும் தமிழ்ச் சமூகமும் தயாராக இருக்க வேண்டும்.

**தொடர்புக்கு: 9840435470**

# விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன்

# எம் எஸ் சுவாமிநாதன் ஆணையம் அறிக்கை



கே.முருகன்

**61 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டு வலுவாக இருந்த இடது சாரி கட்சிகள் மன்மோகன் சிங் தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி 1 அரசை குறைந்தபட்ச செயல் திட்டத்துடன் வெளியிலிருந்து ஆதரித்தனர்.**

அந்த சமயத்தில்தான், தகவல் பெறும் உரிமைச் சட்டம், கல்வி உரிமைச்சட்டம், வன உரிமைப் பாதுகாப்பு சட்டம் ஆகியவை கொண்டுவரப்பட்டது. இடதுசாரிகள் அதிக எண்ணிக்கை யில் இருந்ததால் இது சாத்தியமானது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

மேலும் ஒரு மைல் கல்லாக அமைந்ததே தேசிய வேளாண்மை ஆணையம் ஆகும். விவசாயப் பேரழிவு தடுக்கப்படவும், விவசாயம் காத்து விவசாயிகளின் தற்கொலைகள் தடுக்க படவும் அரசு செயல்பட்டாக வேண்டும் என்ற அடிப்படையில் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் ஒரு அம்சமாக தேசிய வேளாண்மை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்பதும் சேர்க்கப்பட்டது.

புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம். எஸ். சுவாமிநாதன் தலைமையில் தேசிய வேளாண்மை ஆணையம் நவம்பர் 18,2004 ல் அமைக்கப்பட்டது.

எம் எஸ் சுவாமி நாதன், ராம் பதான் சிங், ஒய்.சி.நந்தா ஆகியோர் ஆணைய முழுநேர உறுப்பினர்களாகவும், ஆர்.எல்.பிட்டல், ஜகதீஷ் பிரதான், சந்தா நிம்ப்கர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய செயலாளர்களில் ஒருவரும் அகில இந்திய விவசாயிகள் சங்கம் (கிமிரிஷி) பொது செயலாளருமான அதுல் குமார் அஞ்சான் ஆகியோர் பகுதி நேர உறுப்பினர் களாகவும் நியமிக்கப்பட்டனர்.

தேசிய விவசாயிகள் ஆணையம் டிசம்பர் 2004, ஆகஸ்ட் 2005, டிசம்பர் 2005 மற்றும் ஏப்ரல் 2006 ஆகிய காலங்களில் நான்கு அறிக்கைகள் அரசிடம் அளித்தது. அக்டோபர் 4,2006 ல் 5 ஆவதாகவும் இறுதியாகவும் அரசுக்கு அறிக்கை அளித்தது அதற்கு பிறகு ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசுகள் அறிக்கையை அமல் படுத்த முயற்சிக்கவில்லை.

அறிக்கையில் 11 ஆவது 5 ஆண்டு திட்டத்திற்கான (2007 – 2012) அனுகு முறையில் உள்ளடக்கிய வேகமான வளர்ச்சியின் இலக்கை அடைவதற்கு ஏற்ப பரிந்துரைகளை ஆணையம் வழங்கி யிருந்தது.

1. உலகளாவிய உணவு பாதுகாப்பின் இலக்கை நோக்கி முன்னேறும் வகையில் நாட்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கான ஒரு யுக்தி தேவை
2. விவசாய முக்கிய முறைகளின் உற்பத்தி, லாபம் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துதல்
3. அனைத்து விவசாயிகளுக்கும் கிராமப்புற கடன் உதவி அதிகரிக்க செய்வது தொடர்பாக சீர் திருத்தங்கள்
4. வறண்ட மற்றும் பகுதி வறண்ட பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், மலைப்பகுதி மற்றும் கடலோரப் பகுதி விவசாயிகளுக்கும் உலர் விவசாயத் திற்கான சிறப்பு திட்டங்கள் வகுத்தல்
5. விவசாய விளைப் பொருட்களின் தரம் மற்றும் விலைப் போட்டித்தன்மையை மேம்படுத்தி உலக அளவில் வளர்ச்சி அடையச்செய்தல்
6. சர்வதேச அளவில் விவசாய விளைப் பொருட்கள் விலைகள் கடும் வீழ்ச்சி மாற்றங்கள் ஏற்படும் போது இறக்குமதியிலிருந்து நமது விவசா யிகளை பாதுகாப்பது.
7. நிலையான விவசாயத்திற்கான சூழலியல் அடித்தளங்களை திறம்பட உறுதி செய்வதும், தேர்ந்தெடுக்கப் பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குதல் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இடம் பெற்று இருந்தது குறிப்பிட்ட பிரத்யேக தலைப்புகளிலும் ஆணையத்தின் பரிந்துரை அமைந்திருந்தது.

விவசாய நெருக்கடிகள்,விவசாயிகள் தற்கொலை காரணம் மற்றும் தீர்வு க்கான பரிந்துரைகள் :

விவசாய நெருக்கடி விவசாயிகள் தற்கொலைக்கு வழி வகுத்ததை சுட்டிக்காட்டியுள்ள ஆணையத்தின் அறிக்கை, நிலச்சீர்திருத்தத்தில் நீரின் தரம், அளவு மற்றும் விவசாய விளை நிலங்கள் விற்பனை தொடர்பாக முறைப்படுத்த வழிமுறை செய்யாத முடிக்கப்படாமல் விட்ட நிகழ்ச்சிநிரலே விவசாய நெருக்கடிகளுக்கு காரணம் என்று ஆணையம் கூறியுள்ளது.

நீர்ப்பாசனம் :

மொத்த விளைச்சல் நிலம் 192 மில்லியன் ஹெக்டேர் (1மில்லியன் 10 லட்சம்) நிலத்தில் மழைநீர் விவசாயம் 60 % பங்களிப்பு செய்கின்றது. இது மொத்த விவசாயத்தில் 45 சதவீதமாகும்.

1. நீரின் அளவை அனைவரும் சமமாக பங்கிட்டு பெறுவதற்கான திட்டமிட்ட ஒருங்கிணைந்த சீர்திருத்தம் தேவை
2. மழைநீர் சாகுபடி பரப்பளவு அதிகப்படுத்தப்பட வேண்டும். இதற்கு மழை நீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட வேண்டும். இதை தனியார் இடங்களில் கொண்டு சென்று உறுதி செய்வது அவசியம்.
3. 11 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நீர் பாசனத் துறையில் அரசின் முதலீடு கனிசமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. அளவைவிட விவசாயிகள் வருமான த்தை உற்பத்தி அளவுகளே தீர்மானிக் கின்றது. முதன்மைப்பயிர் பெரிய பயிர் உற்பத்தி செய்யும் நாடுகளைவிட இந்திய விவசாயத்தின் ஒரு யூனிட் பகுதி உற்பத்தி திறன் மிகவும் குறை வாக உள்ளதாக ஆணைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது, விவசாயத்தில் அதிகமான வளர்ச்சியை எட்டுவதற்கு விவசாயம் தொடர்பான நீர், கால்வாய், நில மேம்பாடு, நீரைத் தேக்கி வைத்தல் ஆராய்ச்சி மேம்பாடு சாலைஇணைப்பு வசதிகள் மேம்பாடு ஆகியவற்றில் அரசின் முதலீடு அதிகப்படுத்த வேண்டும்.
5. மேம்படுத்தப்பட்ட மண் ஆராய்ச்சி ஆய்வகங்கள், நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் தொடர்பாக தேசிய நெட் ஒர்க் ஏற்படுத்த வேண்டும்.
6. விவசாயிகளின் தேவைக்கேற்ப காலத்தோடு தேவையான கடன் வழங்க வேண்டும். அது உண்மையான தேவைப்படும் ஏழை விவசாயிகளுக்கு சென்றடையும் வகையில் விரிவுப் படுத்த வேண்டும். 4 சதவீத வட்டியில் பயிர்க்கடன் வழங்க வேண்டும்.
7. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் விவசாய பகுதியில் நிலைமை சகஜ நிலைக்கு திரும்பும் வரையில் கடன் மீட்பு மீதான தடை குறிப்பாக தொழிற் சாலை அல்லாத வகையிலான கடன், வட்டி தள்ளுபடி ஆகியவற்றை நடை முறைப்படுத்த வேண்டும்.
8. இயற்கை சீற்றங்களில் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் விவசாய நெருக்கடி நிதி ஏற்படுத்த வேண்டும் அனைத்து விவசா யிகளுக்கும் விவசாய கடன் அட்டைகள் வழங்க வேண்டும்.
9. ஒருங்கிணைந்த கடன் மற்றும் பயிர் காப்பீடு, மனித உயிர் காப்பீடு திட்டம் மேம்படுத்தப்பட வேண்டும்.
10. குறிப்பிடத்தகுந்த வாழ்க்கை மேம்பாட்டுக்காக ஏழைகளுக்கு நிதி சேவைகள், அடிப்படை கட்டமைப்பு, முதலீடு மேம்பாடு ஆகியவை செயல் படுத்த வேண்டும்
11. மாற்று சந்தை தொடர்புகளை விவசா யிகளுக்கு உருவாக்க வேண்டும். பயிர் வாரியாக உற்பத்தியாளர்கள் அமைப்புகள், சுய உதவிக்குழுக்கள் உருவாக்கி பலப்படுத்த வேண்டும்.



**உணவுப் பாதுகாப்பு :**

பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் இடை மதிப்பீட்டில், 2015 க்குள் பட்டினியை பாதியாக குறைப்பது என்ற மில்லினியம் மேம்பாடு இலக்கை அடைவதில் இந்தியா பின்தங்கி உள்ளதை வெளிப்படுத்தியுள்ளதை குறிப்பிட்டுள்ள அறிக்கை தனிநபர் உணவு தானியம் கிடைப்பதில் சரிவு மற்றும் சமமற்ற வினியோகம் ஆகியவை கிராமம் மற்றும் நகர்ப் புறங்களில் உணவு பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அறிக்கை கூறியுள்ளது.

2004 – 05 ஆம் ஆண்டில் நாட்டில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் 28 சதமாக இருந்தது (கிட்டத்தட்ட 300 மில்லியன்) இருப்பினும் 1999, 2000 ஆம் ஆண்டில் ஒரு நபருக்கு 2400 கலோரிகள் (வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள வரையறையை அடிக் கோடிட்டு காட்டுகிறது)உணவுகள் உட்கொள்ளும் மக்கள் தொகையின் சதவீதம் கிட்டத்தட்ட 77% இருந்ததாக அறிக்கை கூறி இருக்கிறது.

மேலும் மானாவாரி விவசாயப் பகுதிகள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட ஆதாரங்களைக் கொண்ட கிராமப் பகுதிகளில் வறுமை குவிந்திருப்ப தாகவும் உணவுப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதாகவும் பல ஆய்வுகள் காட்டுவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஆணையம் செய்துள்ள பரிந்துரைகள்;**

1. ஒவ்வொரு கிராமமும் நீர் தன்னிறைவை இலக்காகக் கொண்டு கிராம சபைகள் நீர் பஞ்சாயத்துகளாக செயல் பட வேண்டும்.
2. தரமான விதை மற்றும் குறைந்த செலவு தொழில் நுட்பங்கள் பரிந்துரை செய்ய வேண்டும்.இது விவசாயி களுக்கு அதிகபட்சமாக உதவி செய்யும். ஏனெனில் பயிர் பாதிப்பு தோல்வியின் அதிர்ச்சியை அவர்களால் சமாளிக்க முடியாது. குறிப்பாக பி.டி. காட்டன் போன்ற அதிக செலவு கொண்ட தொழில் நுட்பங்களுடன் தொடர்பு உள்ளவர்களால் சமாளிக்க முடியாமல் பாதிக்கப்படுவார்கள்.
3. தரமான விதை மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள் மலிவான விலையில் சரியான இடத்தில் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
4. வறன்ட பகுதிகளில் சீரகம் போன்ற உயிர்காக்கும் பயிர்களின் விஷயத்தில் கவனம் செலுத்தப்பட சந்தை தலையீட்டு திட்டங்களின் தேவை அவசியமானதாகும்.
5. சர்வ தேச விலை ஏற்ற இறக்க நிலை யிலிருந்து விவசாயிகளை காக்க விலை நிலைப் படுத்தும் நிதி ஏற்படுத்த வேண்டும்.
6. கிராமப்புறத் தகவல் மையங்கள் விவசாய நெருக்கடி பகுதிகளில் அமைக்க வேண்டும். இவை விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத வாழ் வாதாரத்தின் அனைத்து அம்சங்களிலும் மாறும் மற்றும் தேவை சார்ந்த தகவல்களை வழங்குவதோடு வழிகாட்டுதல் மையமாகவும் செயல்படும்
7. தற்கொலை நடத்தையின் ஆரம்ப அறிகுறிகளை மக்கள் அடையாளம் காணச் செய்வதற்கு பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அவசியமானது.
8. சிறு அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடையே விவசாயப் போட்டித் தன்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.
9. பரவலாக்கப்பட்ட உற்பத்தியை அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற மையப் படுத்தப்பட்ட சேவைகள் நிறுவன ஆதரவு மேம்படுத்துதல் மற்றும் நேரடி விவசாயி நுகர்வோர் தொடர்பை எளிமையாக்குவது
10. பருத்தி விவசாய தோட்டங்கள் போன்ற பொருட்கள் அடிப்படையிலான விவசா யிகள் அமைப்புகளை மேம்படுத்துவது மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலையை அமல் படுத்துவதில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்
11. நெல், கோதுமை இல்லாமல் மற்ற பயிர்களுக்கும் ஆதரவு விலை உறுதி செய்யப்பட வேண்டும் தினை மற்றும் இதர ஊட்டச்சத்து தானியங்கள் நிரந்தரமாக பொது வினியோக திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
12. பொதுவாக குறைந்த பட்ச ஆதரவு விலை என்பது உற்பத்தி செய்யப் பட்டுள்ள விளைபொட்களின் எடை அளவில் குறைந்தபட்சம் 50 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும்.

தேசிய விவசாயிகள் ஆணைய அறிக்கை தற்போதைய சூழலில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இதை பிரச்சாரம் செய்வதுடன் அமல்படுத்த அரசை வலியுத்த விவசாயிகளை அனிதிரட்டுவோம்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி




◆ விருதுநகரில் வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கணன் மகன் ச.ஜெயராஜா, கா.தேவிகா(எ)சித்ரா தேவி திருமணம் நடைபெற்றது. சிபிஐ தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, திமுக எ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்எல்ஏ, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார, தகஇபெ மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் , மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். மணமகன் சார்பில் ஜனசக்தி வளர்ச்சிநிதி ரூ5000 , மாவட்ட கட்சிநிதி ரூ 10,000 வழங்கப்பட்டது.

◆ விருதுநகர் மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாபட்டி நகர செயலாளர் ஆறுமுகம் மகள் ஆ.பாண்டியம்மாள் எம்.அழகர்சாமி திருமணம் தோணுகாலில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், காரியாபட்டி வட்ட செயலாளர் வேல்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். மணமகள் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ1000 வழங்கப்பட்டது.

# தோழர் பெ.மௌனசாமிக்கு சிறந்த செயற்பாட்டாளர் விருது



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினரும், கண்ணம்பாளையம் பேரூராட்சியின் முன்னாள் தலைவருமான தோழர் பெ.மௌனசாமி அவர்களுக்கு 17.10.2023 அன்று கோவை நிர்மலா மகளிர் கல்லூரியின் சார்பில் "சிறந்த சமூக செயற்பாட்டாளர் விருது" வழங்கப்பட்டது.

பாலதண்டாயுதம் இரத்த தான இயக்கம், பகத்சிங் கண் தான இயக்கம், கல்விச் சேவைகள், மக்களுக்கான போராட்டங்களைப் பாராட்டி அவருக்கு விருது வழங்கப்பட்டது.

## அரசு போக்குவரத்து தொழிலாளர்கள்
# மண்டலம் தழுவிய தர்ணா

விருதுநகர் அரசு போக்குவரத்து தலைமையகம் முன்பு, ஏஐடியுசி ஓர்க்கர்ஸ் யூனியன் சார்பில் மண்டலம் தழுவிய தர்ணா போராட்டம் நடைபெற்றது. 15வது ஊதிய ஒப்பந்தத்தை விரைவாக பேசி முடித்து, தீபாவளிக்கு 25சதவீத போனஸ் வழங்கு, கூடுதல் பணி பார்க்க நிர்ப்பந்தித்தலை கைவிடுல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்றது . மத்திய சங்க தலைவர் இராஜேந்திரன், செயல் தலைவர் பிச்சைக்கனி தலைமை வகித்தனர். கெங்குராஜ், சோமசுந்தரம் முன்னிலை வகித்தனர். மண்டல பொதுச்செயலாளர் பாண்டியன் விளக்கவுரை நிகழ்த்தினார். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எகஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், வி.பொன்னுபாண்டியன் எக்ஸ எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் பேசினார்கள். அமைப்பு செயலாளர் மூர்த்தி நன்றி கூறினார்.

## வினாடி - வினா விடைகள்

1. 1871 மார்ச் 18
2. 1945 அக்டோபர் 24
3. தெற்கு சூடான் 193வது உறுப்பு நாடாக இணைந்தது
4. விஜயலட்சுமி பண்டிட் (1953ல், 8வது தலைவர்)
5. பெர்லினில் லாண்ட்வெர் கால்வாயில் வீசி எறிந்தனர்.
6. கலிலியோ

# தியாக யாத்திரை நூல் வெளியீட்டு விழா




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஜனசக்தி வி. ராதாகிருஷ்ணன் (102) நினைவு புகழஞ்சலி கூட்டமும், கவிஞர் ஜீவபாரதி எழுதிய "தியாக யாத்திரை" நூல் வெளியீட்டு விழாவும் அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா. விஜயகுமார் தலைமை தாங்கினார். கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் இரா. துரைசாமி வரவேற்று பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினரும், ஜனசக்தி ஆசிரியருமான டி . எம். மூர்த்தி பேசுவையில், கோவை சதி வழக்கில் தோழர்களுக்கு எதிராக சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு தோழர் ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் அழைத்துச் சென்றனர். ஆனால் அவர் எதிராக சாட்சியளித்தார். அன்றிரவே தலைமறைவு வாழ்வைத் துவங்கினார். அப்போது அவர் வயது 19. பொள்ளாச்சியில் தோழர் ஜீவா அவர்களின் பேச்சைக் கேட்டு முற்போக்கு சிந்தனையை வளர்த்துக் கொண்டார். தோழர் பி.ராமமூர்த்தியை சந்தித்ததின் பெயரில் தன்னுடைய இருபதாம் வயதில் ஜனசக்தியில் முழு நேர ஊழியராக ராதா பணியில் சேர்ந்தார். தோழர் ராதா சிறந்த பத்திரிகையாளர் மட்டுமல்ல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் தோழர் பி.சி ஜோசி, அஜய் கோஷ், பூபேஷ் குப்தா, ஏஐடியுசி மிராஜ்கர், மோகன் குமாரமங்கலம் உள்ளிட்ட தலைவர்களின் மேடைப்பேச்சை மொழிபெயர்த்து வழங்கியவர்.

அவரது மொழிபெயர்ப்பு பல இளைஞர்களை ஈர்த்துள்ளது. 100 வயது வரை தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தார். மோட்சம மேரியை சாதி, மத மறுப்பு திருமணம் செய்து கொண்டது போலவே அவரது மூன்று பெண் குழந்தைகளுக்கும் சாதி மறுப்பு திருமணம் செய்து வைத்தவர். அவர் எந்த லட்சியத்திற்காக பாடுபட்டாரோ அந்த லட்சியம் ஈடேற சாதி மதம் அற்ற சமூகம் படைப்போம் என்ற மூர்த்தி கேட்டுக் கொண்டார்.முன்னதாக தியாக யாத்திரை என்ற நூலை சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் டி. லெனின் வெளியிட, ராதா கிருஷ்ணன் குடும்பத்தார் டாக்டர் மனோகர், டாக்டர் சாந்தி மனோகர், கீதா ராமலிங்கம், பாரதி, மனோஜ் குமார், சத்பதி, டாக்டர் சுவாதி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், சென்னை பெருநகர மாநகராட்சி அம்பத்தூர் ஏழாவது மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி, ஏ. ஜி. சிதம்பரம் (காங்கிரஸ்), சிபிஐ மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா. கருணாநிதி உள்ளிடோர் வாழ்த்தி பேசினர். கவிஞர் ஜீவபாரதி ஏற்புரை வழங்கினார். பாவை பப்ளிகேஷன்ஸ் பொது மேலாளர் ஆ. சிவகுமார் நன்றி கூறினார் . நிகழ்ச்சியில் எம் மனோகரன் என் கோபிநாதன் லோகநாதன் உள்ளிட்டோர்பங்கேற்றனர்.

## போக்குவரத்து தொழிலாளர் வாயிற் கூட்டம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக தொழிலாளர்களுக்கான பதினைந்தாவது ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை உடனே நிறைவேற்ற வலியுறுத்தியும், போக்குவரத்து கழக நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கண்டித்தும். கரூர் மண்டலம் டிஎன்எஸ்டிசி அலுவலகம் முன்பு ஏஐடியூசி சார்பாக, கரூர் மண்டல தலைவர் பி. பூபதி தலைமையில் வாயிற் கூட்டம் நடைபெற்றது. இதில் மாநில துணை செயலாளர் என். முருகராஜ் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகளை வலியுறுத்தி கரூர் மண்டல தலைவர் ஆர். ராஜேந்திரன், பொது செயலாளர் ஜி. விஜயகுமார், துணைத்தலைவர் ஹரிந்தரன், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சிபிஐ மாவட்ட செயலாளர் கே. என். நட்ராயன் சிறப்புரையாற்றினார்

## குமரி மாவட்ட மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவை தொடங்க வலியுறுத்தல்

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் குமரி மாவட்ட குழு கூட்டம், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ஆர்.செல்வராணி தலைமையில் நடைப்பெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் கட்சி செயல்பாடு குறித்து விளக்கி பேசினார். பழங்குடி மக்கள் தாங்கள் வளர்த்த இரப்பர், அல்பீஸ் மரங்களை வெட்டி தங்கள் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்வதுடன், மீண்டும் விவசாயம் செய்ய அம்மரங்களை வெட்ட வனத்துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குமரிமாவட்டத்தில் புற்று நோய் வேகமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புற்று நோய்க்கு தனிபிரிவு ஏற்படுத்தவும், மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்கின்ற அளவுக்கு மருத்துவமனையை தரம் உயர்த்திட தமிழக அரசை இந்த மாவட்ட க்குழு கேட்டுக்கொள்கிறது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வீட்டுமனை பட்டா வழங்க விதொச கோரிக்கை

அரசுக்குச் சொந்தமான இடங்களில் மூன்றுதலைமுறைகளாக வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க கோரி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் தஞ் சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் அரசுக்கு சொந்தமான மற்றும் அரசு புறம்போக்கு இடங்களில் வீடு கட்டி 3 தலைமுறைகளாக குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்கள்.இவர்களுக்கு வீட்டுமனை பட்டா வேண்டி பலமுறை அதிகாரிகளிடம் மனுக்கள் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே நீண்டகாலமாக பட்டா கிடைக்க போராடிக் கொண்டிருக்கிறார். இவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டும் என கேட்டு கொண்டன. இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் எம். பாரதிமோகன் தலைமையில், மாவட்ட செயலாளர் சி. பக்கிரிசாமி, விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் சி.சந்திரகுமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்துஉத்ராபதி, ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட செயலாளர்கள் துரை.மதிவாணன், ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இண்டூர் ஜி.பாலாஜி முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இண்டூர் வட்டாரம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தளவாய்அள்ளி கிளை செயலாளராகவும்,ஏஐடியூசி தனியார் மோட்டார் தொழிற் சங்க நிர்வாகக்குழு உறுப்பினராகவும் செயல்பட்ட தோழர் ஜி.பாலாஜி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி கிளை சார்பில் கே.வேல்முருகன் தலைமையில் நடைப்பெற்றது தோழரின் உருவப்படத்திர்க்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எம்.மாதேஸ்வரன் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினார்.

வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.ராஜகோபால், எல்.சரவணன், தனியார் மோட்டார் தொழிற்சங்க நிர்வாகிகள் சங்கரன், அசோகன், மூர்த்தி,சரவணன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

# மண் பரிசோதனை ஆய்வுக்கூடத்தை செயல்படுத்த கோரிக்கை

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் பரளச்சி மேலையூர் கிராமத்தில், தொப்லாக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலமாக 2010ல் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் மண் பரிசோதனை ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டது. அதில் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் மண் பரிசோதகர் நியமிக்கப்பட்டனர்.

சுற்றுவட்டாரத்திலுள்ள விவசாய நிலங்களின் மண் பரிசோதனை செய்து வழிகாட்டி உதவியாக இருந்தது. இந்நிலையில் ஆய்வுக்கூடம் மூடப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சியர் உடனடியாக மண் பரிசோதனை ஆய்வுக் கூடத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது. சிபிஐ மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், திருச்சுழி வட்ட செயலாளர் செல்வம் உள்ளிட்டோர் மனுவை ஆட்சியரிடம் அளித்தனர்.

# பாலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும்

## அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் ஆர்ப்பாட்டம்




பாலஸ்தீன மக்கள் மீதான ராணுவத் தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்திட வேண்டும், பாலஸ்தீன விடுதலையை அங்கீகரிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் சாருபில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, ஐப்சோவின் மாநில தலைவர்கள் பேராசிரியர் வி.பி. ஆத்ரேயா, கே.முத்தியாலு ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், ஐப்சோவின் மாநில பொதுச் செயலாளர்கள் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், ஐ.ஆறுமுக நயினார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

மாநில துணைச் செயலாளர் கோபிகுமார் நன்றி கூறினார்.

# வானாபுரம் சுமைப்பணி தொழிலாளர் சங்க உறுப்பினர் அட்டை வழங்கும் விழா

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த பகண்டை கூட்டு சாலையில் உள்ள வாணாபுரம் ஏஐடியுசி சுமைப்பணி தொழிலாளர் சங்கத்தின் 2ம் ஆண்டு துவக்க விழா மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் செந்தில் தலைமை வகித்தார், கௌரவ தலைவர் தங்கவேல், துணை செயலாளர்கள் உமாநாத், ரமேஷ், துணைத் தலைவர் பாண்டியராஜ், பொருளாளர் ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கப் பெயர் பலகையை மாவட்ட பொருளாளர் கோவிந்தராஜ் திறந்து வைத்தார், அகில இந்திய துணைத் தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார், உறுப்பினர் அட்டையை தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் வழங்கினார்.

இதில், மாவட்ட பொது செயலாளர் சௌரிராஜன், வி.தொ.ச.மாவட்ட செயலாளர் அப்பாவு, மாவட்ட குழு உறுப்பினர் கலியபெருமாள், இந்திய கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கல்யாணசுந்தரம், ஆஷா பணியாளர் சங்க மாவட்ட தலைவர் ஆண்டாள், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

# 15வது ஊதிய ஒப்பந்தத்தை விரைந்து பேசி முடித்திடுக!

திருச்சி மாவட்ட போக்குவரத்து கழக ஏ ஐ டி யு சி மாவட்ட மாநாடு கே. டி. கே. அரங்கில் நடைபெற்றது

இம்மாநாட்டிற்கு மத்திய சங்க தலைவர் நேரு துரை தலைமை வகித்தார். அனைவரையும் டி. வி. செல்வராஜ் வரவேற்றார். மாவட்ட மாநாட்டு கொடியினை நடராஜ் ஏற்றி வைத்தார். மாவட்ட பொது செயலாளர் சுப்பிரமணியன் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மாநாட்டை வாழ்த்தி தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ் குமார், மாநகர் மாவட்ட செயலாளர் சிவா, ஏ. ஐ. டி. யு. சி. மாவட்டத் தலைவர் நடராஜ், மாவட்ட செயலாளர் சுரேஷ், மாவட்ட பொருளாளர் ராமராஜ், கட்டுமான சங்க மாவட்ட தலைவர் எம். ஆர். முருகன், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் பழனிச்சாமி, ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட துணைத் தலைவர் ஜனசக்தி உசேன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

மாவட்ட தலைவராக டி.வி. செல்வராஜ், துணைத் தலைவர்களாக க.நேருதுரை, வி.வி.செல்வராஜ் எஸ்.அய்யப்பன், என்.மாரிமுத்து, எஸ். மாசிமலை, வி.கே.வெள்ளச்சாமி, பொதுச் செயலாளர்களாக ஏ. சுந்தர்ராஜு, துணை செயலாளர்களாக எம். சுப்பிரமணியன், ஜி. ஆறுமுகம், ஜெ. நடராஜன், வி. பழனிச்சாமி, பி. ராமசாமி , சந்திரசேகரன், பொருளாளராக ஜி. கார்த்திகேயன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் .

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சம்மேளன துணைச் பொது செயலாளர் என். முருகராஜ் உரை நிகழ்த்தினார்.

தமிழக அரசு 15வது சம்பள ஒப்பந்த பேச்சு வார்த்தையை உடனடியாக பேசி முடிக்க வேண்டும், போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 25 சதவீத போனஸ் வழங்கிட வேண்டும், அனைத்து வழித்தடங்களிலும் முழுமையாக பேருந்துகளை இயக்கிட வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வடசென்னை மீனவர்கள் ஏஐடியுசியில் இணையும் விழா



தெருச்சுமை மீனவர் தொழிலாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தைச் சார்ந்த 200 தொழிலாளர்கள் தங்களை ஏஐடியூசி தமிழ்நாடு மீனவ தொழிலாளர் சங்கத்தில் வடசென்னை கொடுங்கையூரில் இணைத்து கொண்டனர். அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

பங்கேற்ற அனைவரையும் ஜெயவேல் வரவேற்றார். எஸ்.நாகராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்

மாவட்ட துணை தலைவர்கள் கே.வெள்ளைச்சாமி, பி.நாகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.தணிகாசலம், எம்.குமார், மாவட்ட பொருளாளர் இ.போஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஜடியூசி வடசென்னை மாவட்ட தலைவர் எம். எஸ். மூர்த்தி, ஏஜடியூசி வடசென்னை மாவட்ட துணை தலைவர் ஆர். பாளையம், கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணை செயலாளர் ஜீ.சுப்ரமணி, மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் தோழர் இரா. இராமசாமி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

மாவட்ட தலைவர் எஸ்.காளிமுத்து நன்றி கூறினார்.

# மாமல்லபுரத்தில் ஆட்டோ சங்க துவக்கவிழா

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பூஞ்சேரி சந்திப்பில் ஷேர் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் துவக்கப்பட்டது

கிளை தலைவர் பி. விஜயக்குமார் தலைமை தாங்கினார். கிளை செயலாளர் எஸ்.கார்த்தி அனைவரையும் வரவேற்றார். சங்கத்தின் மாவட்ட செயலாளர் க. ஜெகதீசன் கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

சிபிஐ திருப்போரூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் எம்.பார்த்திபன் பெயர் பலகையை திறந்து வைத்தார்.

கௌரவ தலைவர் இ.முனுசாமி, சட்ட ஆலோசகர் மோ. வெங்கடேசன், டிடிபிஐ மாவட்ட துணை செயலாளர் ஒய். ஹாருன்பாஷா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

# அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் கருத்தரங்கம்




மதுரையில் சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் சார்பாக, ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து கருத்தரங்கம் மூட்டா அரங்கில் வி.விருமாண்டி தலைமையில், ந.ஜீவானந்தம் வரவேற்க, பா.ராஜலெட்சுமி, எஸ்.திருப்பதி, பி.வீரணசிங்கம் முன்னிலை வகிக்க நடைபெற்றது. கருத்தரங்கில் பேராசிரியர் அருணன், தந்தை பெரியார் திராவிடர் கழக நெறியாளர் பி.வரதராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன், மதிமுக தொழிற்சங்கத்தின் எஸ்.மகபூப்ஜான் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

# கரூர் மாவட்ட விவசாய சங்க பேரவை

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் கரூர் மாவட்ட பேரவை கூட்டம் தாலுகா செயலாளர் எம். பி. செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத் தலைவர் சி. எம். துளசி மணி வாழ்த்துரை வழங்கினார். இதில் மாவட்ட அமைப்பாளராக எம்.பி. செல்வம் தேர்வு செய்யப்பட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சண்முகம் மற்றும் பி. எஸ். ராஜேந்திரன், மாதர் சங்க மாவட்ட தலைவர் என். ரஜனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே. என். நாட்ராயன் நிறைவு உரையாற்றினார்.

# ஊதிய பாக்கியை வழங்க கோரி விதொச மனு கொடுக்கும் போராட்டம்




தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில், 100 நாள் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 11 வாரமாக வேலை செய்த பாக்கி சம்பளத்தினை உடனடியாக வழங்க கோரி வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு மனு கொடுக்கும் போராட்டம் எலச்சிபாளையம், மல்லசமுத்திரம், திருச்செங்கோடு ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்றது. எலச்சிபாளையம் ஒன்றிய தலைவர் வி.சண்முகசுந்தரம், மல்லசமுத்திரம் ஒன்றிய தலைவர் ஏ.வரதராஜு, திருச்செங்கோடு ஒன்றிய தலைவர் எம்.சந்திரன் தலைமையில் யடைபெற்றது. வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், ஏஐடியுசி ஆட்டோ சங்கப் பொறுப்பாளர் டி.கே.சுப்பிரமணி, கட்டட சங்க மாவட்ட தலைவர் சி.நந்தகுமார், சிபிஐ திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.முனுசாமி, சிபிஐ திருச்செங்கோடு ஒன்றிய துணைச் செயலாளர் கே.முரளிகிருஷ்ணன், கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கோபிராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 136. அளவறிந் தாற்றல்

**ஆற்றலில் எல்லாஅம் ஆற்றல் அளவறிந்**
**தாற்றல:. தல்ல தவம்.**

செயல்களில் எல்லாம் ஆற்றல் மிக்க செயல் என்பது, அளவறிந்த செயல்பாடே ! அப்படி அளவறியாத செயல்பாடு, குறை பாட்டைத்தரும்.

**ஆற்றுங்கால் ஆசறிவான் யாரோ அவனேதான்**
**போற்றும் புகழுடை யான்**

செயலில் ஏற்படும் குறைபாடுகளை உணர்ந்து அறிபவன் எவனோ, அவனே பிறர் போற்றும் படியான புகழ் அடைவான்.

# நூல் நயம்

## கொள்ளை போகும் மக்கள் பணம் மக்கள்




ஒரு அரசாங்கம் இயங்குவதற்கு மக்களின் வரிப்பணம் அடிப்படையாக இருக்கிறது. அரசாங்கத்தின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும், அரசு இயந்திரம் இயங்குவதற்கும் மக்கள் வரிப்பணம் தான் முக்கியமாக இருக்கிறது. மக்கள் வரிப்பணத்தை முறையாக வசூலித்து, அவற்றை சேமித்து, மக்களின் அடிப்படை தேவைகளுக்கு செலவிட வேண்டிய அரசாங்கங்கள். அதற்கு மாறாக, அந்தப் பணம் பல்வேறு பெரு முதலாளிகளால் எவ்வாறு கொள்ளையடிக்கப்படுகிறது என்பதை எம். ஆர். ரகுநாதன் தொகுத்து எழுதிய இந்நூல் நமக்கு நன்கு விளக்குகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி என்பது இந்திய மைய வங்கியாகும். இது 1934 இல் பிரிட்டிஷ் அரசின் சட்டப்படி ஐந்து லட்சம் பங்குகளை கொண்ட, 5 கோடி ரூபாய் முதலீட்டுடன் தொடங்கப்பட்டது. இந்திய விடுதலைக்குப் பின் 1949 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி தேசியமயமாக்கப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை இயற்றி, அதன் அபிவிருத்தி திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய ஒரு நிர்வாக அமைப்பாகும். அரசு உட்பட வேறு யாருக்கும் பண அச்சிடும் அதிகாரம் கிடையாது. இவ்வளவு சட்டதிட்ட, விதிகளுடன் உருவாக்கப்படுகிற பணம்தான், ஆட்சியாளர்களின் ஆசியுடன் பெருமுதலாளிகளால் இன்றைக்கு கொள்ளையடிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கடனாக பெரும் பெருமுதலாளிகள் அவற்றை திருப்பி செலுத்தாமல், ஆட்சியில் இருப்போரின் துணையுடன் வெளிநாடுகளுக்கு தப்பி சென்று விடுகிறார்கள். அங்கு சொகுசு வாழ்க்கை அமைத்துக் கொள்கிறார்கள். ஆனால், இவர்கள் பெற்ற கடன்களை வரக் கடன்கள் எனக் கூறி இங்கு தள்ளுபடி செய்து விடுகிறார்கள். இதனால் இந்திய மக்களின் வரிப்பணம் கொள்ளையோ கொள்ளை என போய்விடுகிறது .

எந்தெந்த வங்கிகளில் யார் எவ்வளவு பணத்தை கடனாக பெற்று இருக்கிறார்கள். அவற்றை திருப்பி செலுத்தாமல் தலைமறைவாக இருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தை அறிதினும் முயன்று திரட்டி இந்நூலில் நூலாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பை உடைக்கும் இந்த மூர்க்கர்களை இனம் கண்டு கொள்வதற்கு இந்நூல் பெரிதும் உதவும். இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | எம். ஆர். ரகுநாதன் |
| பக்கம் | : | 190 விலை: 290 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## நீலகண்ட பிரம்மச்சாரி




இந்திய நாட்டின் விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளில் குறிப்பிடத்தக்கவர் நீலகண்ட பிரம்மச்சாரி . அவரின் வாழ்க்கை வரலாற்று தடங்களை நாடக வடிவில் தமிழ் கூறும் நல் உலகுக்கு கொடுத்திருக்கிறார் கோமதி சங்கர் அவர்கள்.

நீலகண்ட பிரம்மச்சாரி அபிநவ் பாரத் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டார். மெட்ராஸில் விபின் சந்திரபாலரின் உரையை கேட்டு அவருடன் நட்பாகி, அவரது இயக்கத்தின் கொள்கைகளை ஏற்று நடந்தார். ஆயுதம் ஏந்தி போராடி வெள்ளையர்களை வெளியேற்ற இளைஞர்களை திரட்டினார். திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இளைஞர்களை விடுதலை இயக்கத்தின் பால் ஈர்த்தார். இந்நிலையில் தூத்துக்குடியில் வ. உ .சி. சிறையில் அடைக்கப்பட்டது மக்களை கொதித்து எழ செய்தது. கொடுங்கோலன் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டு படுகொலை செய்கிறான்.

தனிநபர் பயங்கரவாதத்தில் நாட்டமில்லாமல் காசிக்கு சென்று விட்ட நீலகண்டரை, இந்த கொலை வழக்கில் பொய்யாக சேர்த்து விடுகின்றனர். நண்பர்களின் ஆலோசனை பேரில் காசியில் இருந்து கல்கத்தா சென்று காவல்துறையில் சரணடைகிறார் நீலகண்டர். ஆஷ் கொலை வழக்கில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு எட்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெறுகிறார். சிறையில் இருந்து வெளிவந்த பின்னர் சிங்காரவேலரோடு இணைந்து கம்யூனிஸ்ட் இயக்கத்தில் செயல்படுகிறார். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரசுரங்களை விநியோகித்ததற்காக மீண்டும் சிறையில் அடைக்கப்படுகிறார். 1930 இல் சிறையில் இருந்து வெளிவரும் அவர், ஓம்கார் சுவாமிகள் ஆகி 1978ல் மறையும் வரை மக்கள் தொண்டு செய்கிறார்.

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகிற ஒரு மனிதன் எவ்வளவு துன்பத்துயரங்களை சந்திக்க வேண்டி இருக்கிறது அவதூறுகளை சந்திக்க வேண்டி இருக்கிறது என்பதை இந் நூலில் நம் மனதில் கல்வெட்டாக பதிவு செய்கிறார் நூல் ஆசிரியர். நீலகண்ட பிரம்மச்சாரி என்னும் ஒரு தேசபக்தரை அறிய, நாடக வடிவில் எழுதப்பட்டுள்ள இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | கோமதி சங்கர் |
| பக்கம் | : | 128 விலை : 150 |
| வெளியீடு | : | சுவடு வெளியீடு 7ஏ, ரங்கநாதன் தெரு, சேலையூர், சென்னை–73 |

மூத்த தலைவர்

# சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்: ஒப்புதல் வழங்க மறுக்கும் ஆளுநர்

**இரா.முத்தரசன் கண்டனம்**



மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் : ஒப்புதல் வழங்க மறுக்கும் ஆளுநர் செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கடும் கண்டனம். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு.

இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மூத்த தலைவர் தோழர் என்.சங்கரய்யா அவர்களுக்கு "கௌரவ டாக்டர்" பட்டம் வழங்குவது என தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை முடிவெடுத்து, வரும் நவம்பர் 2 ஆம் தேதி மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்தும் நிகழ்வில் வழங்க ஏற்பாடுகள் நடத்து வருகின்றன.

இந்த நிலையில் பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற முறையில் ஆளுநரின் ஒப்புதலை பெறுவதற்காக தமிழ்நாடு அரசு ஆவணங்களை ஆளுநருக்கு கடந்த ஆகஸ்டு மாதத்தில் அனுப்பியுள்ளது.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தியாக வாழ்வின் அடையாளமாக திகழ்பவர் தோழர் என்.சங்கரய்யா. காலனி ஆட்சி காலத்திலும், விடுதலை பெற்ற பின்னரும் மக்கள் நலன், தேச நலன் தொடர்பான கோரிக்கைகள் மீது போராடி சிறை சென்றவர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறப்பான பங்களிப்பை செலுத்தியுள்ளவர். நாடு முழுவதும் பரந்து வாழும் விவசாயிகளை சங்க அமைப்பில் திரட்டுவதில் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர். மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருந்தவர்.

மூத்த அரசியல் தலைவர்கள் காமராஜ், அண்ணா, ஜீவானந்தம், கலைஞர் போன்றோருடன் இணைந்து பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

தமிழ்நாடு அரசு "தகைசால் தமிழர்" விருது கொடுத்து கௌரவித்துள்ளது.

தமிழக மக்களின் பெருமதிப்பை பெற்ற பொதுவாழ்வுக்குரிய தோழர்.என். சங்கரய்யாவுக்கு "கௌரவ டாக்டர்" பட்டம் வழங்கும் தமிழ்நாடு அரசின் முடிவை ஏற்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி நிறுத்தி வைத்திருப்பது அறிவுக்கு பொறுத்தமற்றது ஆளுநரின் பொறுப்புக்கு உகந்த செயலும் அல்ல. ஆளுநரின் அநாகரிக செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என தனது அறிக்கையில் இரா.முத்தரசன் வலியுறுத்தல்.

# பட்டாசு வெடி விபத்துக்களை தடுப்பதில் அரசு உறுதி காட்ட வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

பட்டாசுவெடி விபத்துக்களைதடுப்பதில் அரசு உறுதி காட்ட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

அண்மையில் கர்நாடக எல்லையில் நடந்த பட்டாசு வெடி விபத்தில் 14 உயிர்கள் பலியான அறிந்து அதிர்ச்சியுற்றோம். அதன் அதிர்வலைகள் அடங்கும் முன்பு சிவகாசி அருகில் உள்ள ரெங்கம்பாளையத்தில் பட்டாசு கடையில் ஏற்பட்ட விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது நெஞ்சை பிழியும் வேதனையாகும். இந்த விபத்தை தொடர்ந்து திருத்தங்கலில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெடிகளை இருப்பு வைக்கும் இடங்களையும், விற்பனை செய்யும் இடங்களையும் நேரில் பார்வையிட்டு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அமைந்திருக்கிறதா என்பதை உறுதிசெய்யாத அதிகாரிகளின் அலட்சியம் தான் இதுபோன்ற விபத்துக்களுக்கு முதன்மை காரணமாகும். இந்த அலட்சியப் போக்கை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

உயிரிழந்தோர் குடும்பத்திற்கு முதலமைச்சர் தலா. ரூ.3 லட்சம் நிவாரண நிதி வழங்கியிருப்பது ஆறுதல் அளிக்கும் எனினும் விபத்துகளை தடுக்கும் கறாரான நடவடிக்கைகளை அரசு உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

வெடி விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது குடும்பங்களின் மறுவாழ்வுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு செய்துதர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அமைதியை சீர்குலைத்து அரசியல் ஆதாயம் தேடும் பாஜகவின் மலிவான செயல்

**இரா.முத்தரசன் கண்டனம்**

அமைதியை சீர்குலைத்து அரசியல் ஆதாயம் தேடும் பாஜகவின் மலிவான செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு பாஜக தலைவர் கே. அண்ணாமலை, கிழக்கு கடற்கரை சாலையில் பனையூரில் உள்ள பங்களாவில் குடியேறியுள்ளார். அவரது பங்களா இருக்கும் தேசிய நெடுஞ்சாலையில் அரசின் அனுமதி பெறாமல், பாஜகவினர் 60 அடி கொடிக்கம்பம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கொடிக் கம்பம் நடப்படும் இடத்திற்கு அருகில், உயர் அழுத்த மின் பாதை செல்வதால் விபத்து ஏற்படும் ஆபத்தை கருத்தில் கொண்டு கொடிக்கம்பம் அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது தொடர்பான புகார் காவல்துறையின் கவனத்துக்கு சென்ற பின்னர், காவல் துறை கொடிக்கம்பத்தை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, பாஜகவினர் கலகத்தில் ஈடுபட்டு பெரும் ரகளை செய்துள்ளனர்.

பொது மக்களின் ஆதரவுடன் அமைய வேண்டிய கொடிக்கம்பம் அமைக்கும் அரசியல் நிகழ்வை, மதவெறியூட்டும், பகை வளர்க்கும் வன்மத்துடன் பாஜக அரசியலை அணுகியுள்ளது.

இது போன்ற செயல்களை தடுத்து நிறுத்த வேண்டிய கட்சியின் தேசியத் தலைவர், நான்கு உறுப்பினர்கள் குழு அமைத்திருப்பது அச்சுறுத்தல் நடவடிக்கையாகும். மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை, அமைதியை சீர்குலைக்கும் வாய்ச்சவடால் மூலம் ஆத்திரமூட்டும் செயலில் ஈடுபட்டு வருகிறார்.

ஊருக்கு, ஊர், தெருவுக்கு, தெரு என யாருக்கு எதிராக, எதனைக் காரணமாக்கி, கலகம் உருவாக்குவதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடலாம் என வெறியோடு அலையும் பாஜகவின் மலிவான செயலை, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என்று இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

கலை இலக்கியப் பூங்கா

பிருத்விராஜ் கபூர், பால்ராஜ் சஹானி, தமயந்தி, கைஃபி ஆஸ்மி மற்றும் தினா பதக் போன்ற பிரபலமான கலைஞர்கள் உள்பட பல்லாயிரக்கணக்கான கலை இலக்கியவாதிகளை இந்த அமைப்பு உருவாக்கித் தந்தது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா

# திரைப்படங்கள் ஆவணப்படங்களை உருவாக்கும் முயற்சி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி நூறாவது ஆண்டு தொடங்க இருக்கிறது. 1924 டிசம்பர் 26ம் நாள் தொடங்கி, ஆண்டு முழுவதும் நூற்றாண்டு விழாக்களை நடத்த கட்சி திட்டமிட்டு இருக்கிறது.

அதன் ஒரு பகுதியாக திரைப்படங்கள், ஆவணப் படங்களை ஓ.டி.டி. தளங்களில் வெளியிடுவதற்கான ஆயத்தங்களில் கட்சி ஈடுபட்டு உள்ளது.

இந்திய விடுதலை போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆற்றிய பங்கு, அதன் உறுப்பினர்கள் செய்த தியாகங்கள், அதன் தலைவர்கள் மற்றும் முக்கிய செயல்பாட்டாளர்களின் வாழ்க்கை வரலாறுகள், விடுதலைக்கு முன்பும் பின்பும் தொழிலாளர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், நிலத்தின் மீதான உரிமைகளுக்காகவும் கட்சி நடத்திய வீரமிகு போராட்டங்கள், வெவ்வேறு மொழிகளின் கலைகள், இலக்கியங்களில் கம்யூனிஸ்ட்களின் புகழ்மிக்க பங்களிப்புகள் ஆகியவற்றை, தனித்தனி திரைப்படங்களாக உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'இந்திய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் அளப்பரிய பங்களிப்பையும் தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். வெவ்வேறு தளங்களில் உருவாக்கப்பட்ட வர்க்க, வெகுஜன அமைப்புகளின் இயக்கங்களுக்கு துணை நின்று, வழிகாட்டி, தலைமையேற்று மக்கள் நலன் காக்கும் போராட்டங்களில் முன்னணியில் நின்று இருக்கிறார்கள்.

பிரெஞ்சுக்காரர்களிடம் இருந்து புதுச்சேரியையும், போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து, கோவாவையும் விடுவிக்க நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான் தலைமை ஏற்றது.

'இவற்றையெல்லாம் பொதுவெளியில் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனை செயலுக்கு கொண்டு வருவதற்காக, கட்சி ஏற்கனவே சில இயக்குநர்களை அணுகியுள்ளது' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் பாலச்சந்திர காங்கோ கூறினார்.

விடுதலைப் போராட்டத்தில் அகில இந்திய மாணவர் பெருமன்றம் (ஏஐஎஸ்எஃப்) ஆற்றிய பணியும், பாலிவுட்டை வடிவமைக்கவும், அன்றைய மிகச் சிறந்த முன்னணி நடிகர்களை எல்லாம் எவ்வாறு இந்திய மக்கள் நாடக மன்றம் (இப்டா) உருவாக்கியது என்பதும் இவற்றில் கூறப்படும்' என்று காங்கோ கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கான்பூரில் 1925 டிசம்பர் 26 ஆம் தேதி அன்று உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னதாகவே 1920 அக்டோபர் 31 அகில இந்திய



தொழிற்சங்க பேராயம் (ஏஐடியுசி) தோன்றியது.

அனைத்திந்திய மாணவர் மன்றம் (ஏஐஎஸ்எஃப்) 1936ம் ஆண்டில் துவக்கப்பட்டு, இந்தியா முழுவதும் மாணவர்களை ஒன்றிணைத்தது. இந்திய மக்கள் நாடக மன்றம் (இப்டா)1936 ஆம் ஆண்டில் உருவானது. இது புரட்சிகர பாடல்கள், நாடகங்கள், வீதி நாடகங்கள், நாட்டுப்புற கலை மற்றும் கலாச்சாரத்தின் மறுமலர்ச்சி ஆகியவற்றின் உதவியுடன் இந்திய விடுதலைப் போராட்டத்தை ஊக்குவித்தது.

பிருத்விராஜ் கபூர், பால்ராஜ் சஹானி, தமயந்தி, கைஃபி ஆஸ்மி மற்றும் தினா பதக் போன்ற பிரபலமான கலைஞர்கள் உள்பட பல்லாயிரக்கணக்கான கலை இலக்கியவாதிகளை இந்த அமைப்பு உருவாக்கித் தந்தது.

பல்வேறு வடிவங்களில், நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் நூற்றாண்டு கொண்டாட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு தேசிய அளவில் 20 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் இக்குழுவில் இடம் பெற தமது பிரதிநிதிகளை தேர்வு செய்து தரும்போது இக்குழு மேலும் விரிவு படுத்தப்படும்.

கட்சியின் 24வது பேராயம், சென்ற ஆண்டு விஜயவாடாவில் நடைபெற்ற போது, நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களுக்கு முன்னதாகவே ஆயத்தங்களின் ஈடுபடுமாறும், அதற்காக உரிய திட்டங்களை வகுக்குமாறும் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அழைப்பு விடுத்திருந்தார். கட்சியை மேலும் வலிமைப்படுத்தவும், கட்சியிலும் அதன் அரங்கங்களிலும் புதிய உறுப்பினர்களை சேர்க்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

உறுப்பினர்கள் மட்டுமின்றி, கட்சிக்கு வெளியிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை மதிக்கிற, நேசிக்கிற ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். கட்சியின் மூத்த தோழர்கள், கட்சி அனுதாபிகள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஈடுபடுத்தும் வகையில் நூற்றாண்டு விழா திட்டங்கள் உருவாக்கப்படும் என்று டாக்டர் காங்கோ கூறினார்.

---

### கருத்தரங்கம்

தஞ்சை கல்வி இயக்கம், அகில இந்திய முற்போக்கு பேரவை மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் இணைந்து நடத்திய மாணவ மாணவியர்களுக்கான எது அவசியம்? தாய்மொழி தமிழா? அயல்மொழி ஆங்கிலமா? என்ற தலைப்பிலான சிறப்பு கருத்தரங்கம் தஞ்சாவூர் பெசன்ட் அரங்கத்தில் நடைபெற்றது.

இதில் ஓய்வு பெற்ற ஆசிரியர் மா.சுந்தரமூர்த்தி வரவேற்புரை ஆற்ற, ஓய்வு பெற்ற ஆசிரியர் அய்யாறு புகழேந்தி தலைமையுரை ஆற்றினார். அ.சிவஞானம் முன்னிலையில், முனைவர் ஆர். சுவாமிநாதன், ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. ராமலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். வழக்கறிஞர் பிரகாசம் கருத்துரை ஆற்ற, முனைவர். எல்.மலர்வண்ணன் நன்றியுரை ஆற்றினார்.

### ஆய்வரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோவை கிழக்கு சார்பில் இரா.முருகவேல் எழுதிய "சர்ரியல் இரவு" சிறுகதை தொகுப்பு குறித்து முனைவர் தங்கம் தலைமையில் ஆய்வரங்கு நடைபெற்றது. இதில் முனைவர் ராஜேந்திரன், முனைவர். பொ.உத்திரகுமார் ஆகியோர் ஆய்வுரையாற்றினர்.

### தொ.மு.சி ரகுநாதன் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்

சிவகங்கை மாவட்டம் "தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்" மற்றும் ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை இணைந்து தொ.மு.சி ரகுநாதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு நாள் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டின் தலைமை உரை வழங்கினார். கல்லூரி முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜான் வசந்தகுமார் வாழ்த்துரை வழங்கினார்.

பேராசிரியர் தர்மராஜ் வாழ்த்துரை நல்கினார். இந்த கருத்தரங்கின் நோக்க உரையை மாவட்ட செயலாளர் பேராசிரியர் கரு.முருகன் விளக்கிப் பேசினார். திருவாடானை அரசுக்கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு.பழனியப்பன் அறிமுக உரை வழங்கினார்.

இதில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநில பொதுச்செயலாளர் மருத்துவர்.த.அறம் இலக்கிய உரை நிகழ்த்தினார். தேவகோட்டை மருத்துவர் ஜெயக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

"பாரதி காலமும் கருத்தும்" என்ற தலைப்பில் முனைவர்.இரா.கீதா உரையாற்றினார். தொ.மு.சி "வாழ்வும் இலக்கியமும்" என்ற தலைப்பில் பல்துறை கலைஞர் இரா.பூபதி உரை நிகழ்த்தினார். "எனது பார்வையில் தொ.மு.சி ரகுநாதன்" என்ற தலைப்பில் முனைவர்.ரா.ராமேஸ்வரி உரையாற்றினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ் முதுகலைத்துறை பேராசிரியர்களும், மாணவிகளும் சிறப்பாக செய்திருந்தனர்.

### கவிதை நூல் வெளியீட்டு விழா

'நிலம் தின்னும் அதிகாலை' கவிதை நூல் வெளியீட்டு விழா. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், மதுரை மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா அவர்களின் "நிலம் தின்னும் அதிகாலை" நூல் வெளியீட்டு நிகழ்வு, த.க.இ.பெ தலைமைக் குழு உறுப்பினர் தி.சு.நடராசன் தலைமையில், மதுரை மணியம்மை மழலையர் பள்ளியில் நடைபெற்றது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை நல்கினார்.

கவிதை நூலை தஞ்சை தமிழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.திருமலை வெளியிட, முதற் பிரதியை த.க.இ.பெ மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் பெற்றுக் கொண்டார்.

புரட்சிக்கவிஞர் மன்றம் தலைவர் வரதராஜன் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் ஆனந்தகுமார் நூல் குறித்து ஆய்வுரை வழங்கினார். நூலாசிரியர் செல்லா ஏற்புரை வழங்கினார். பேனா மனோகரன் நன்றி உரை தெரிவித்தார்.

நிகழ்வை பைந்தமிழ் இலக்கியப் பேரவை தலைவர் அதிவீரபாண்டியன் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் இந்திரா காந்தி, தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம், கவிஞர்கள் மலர் மகள், மஞ்சுளா, மூரா, இரவி, சந்திரன் முதலியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### கருத்தரங்கம்

மாற்றுப்பண்பாட்டு சிந்தனைக்களம் சார்பில், பல்வேறு பொருண்மைகளின் கீழ் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் இ.முத்தையா ஒருங்கிணைத்து வரும், மருத்துவர் விஜயா வெண்ணிலா நினைவு சொற்பொழிவு தமிழ்நாட்டின் பல்வேறிடங்களில் நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக வரலாற்றை எழுதும் பணிகள் ஆய்வுப்பரப்பில் இரண்டு உரைகள். லட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரி ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் சேவியர்சந்திர போஸ், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் ஆ.தனஞ்சயன் இருவரும் உரைநிகழ்த்தினார்கள்.

### முப்பெரும் இலக்கிய நிகழ்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் முப்பெரும் இலக்கிய நிகழ்வு விருதுநகரில் நடைபெற்றது.

சமூக ஆர்வலர் காயத்ரி வரவேற்புரை ஆற்றினார். விருதுநகர் மாவட்டத் துணைச் செயலாளர் கவிஞர் பயணம் சுரா தலைமை உரையாற்றினார்.

திரை விமர்சன அரங்கில் மாமன்னன் திரைப்படத்தை குறும்பட இயக்குனர் ராம்போ குமார், ஜெயிலர் திரைப்படத்தை குறும்பட இயக்குனர் ஏ.ஆர்.எம். முத்து ஆகியோர் விமர்சனம் செய்தார்கள்.

நூல் விமர்சன அரங்கில் திலகவதி எழுதியுள்ள 'சுனையாய் உருப்பெரும் கவிதை' நூலை விருதுநகர் கவிஞர் மங்கையர்க்கரசி, எழுத்தாளர் தேவிபாலா குணசேகரன் எழுதியுள்ள 'நீயின்ற கவிதை' நூலை விருதுநகர் மாவட்டத் தலைவர் மதிப்புறு முனைவர் நீல நிலா செண்பகராஜன் விமர்சனம் செய்தார்.

நாட்டுப்புறக் கலைஞர் ஷாஜகான் பாரதியாராகவும், திருவள்ளுவராகவும் வித்தியாசமாக நடித்தார்.

36வது படைப்பரங்கில் பயணம் சுரா, முத்துக்குமார் கவிதை வாசித்தார்கள். காயத்ரி தொல்காப்பியம் குறித்து பாடல் பாடினார். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை சங்கத்தின் மாவட்ட செயலாளர் பழனிக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

கவிஞர் ஜென்சாலோ இந்திரா குழந்தைகள் மற்றும் வன்முறை குறித்து உருக்கமாக பேசினார். நிறைவாக கவிஞர் சாரதி குணாளன் நன்றி கூறினார்.

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், சென்னை மாவட்டம் மற்றும் சென்னை ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் சார்பில் நூல் அறிமுக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ வரவேற்புரை நல்கினார். வருமான வரித்துறை அலுவலர் சு. எத்திராஜ் தலைமையுரை ஆற்றினார். ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் பொதுச் செயலாளர் முனைவர் ப.தாமரைக்கண்ணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார்.

கவிஞர் இரவீந்திரபாரதி எழுதி பரிதி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'அறம் வளர்த்த அதியமான்' என்னும் வரலாற்றுப் புதினம் குறித்து முனைவர் ஆ. அருள்மணி ஆய்வுரை வழங்கினர்.

கவிஞர் இரவீந்திரபாரதி எழுதி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்டுள்ள 'நீரோட்டம்' நூல் குறித்து முனைவர் கு.சுரேஷ் நூல் விமர்சனம் செய்தார்.

கவிஞர் இரவீந்திரபாரதி ஏற்புரை வழங்கினார். கவிஞர் பு.சீ.கிருஷ்ணமூர்த்தி நன்றியுரை கூறினார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 28.10.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# அக்.31, 104ம் பிறந்தநாள்! ஏஐடியுசி நீடூழி வாழ்க!



டி.எம்.மூர்த்தி

இந்த கிழக்கு தேச தொழிலாளர்களின்
விடியல்
வடக்கில் இருந்து வந்தது!
அடியும் உதையும் வாங்கி
கருணைக்காக கையேந்தி நின்ற
தொழிலாளர்கள், வர்க்கமாகி
ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சியை
ரஷ்யாவில் புரட்டிப் போட்டுவிட்டு,
செங்கோலைத் தாமே ஏந்தினர்!

புதிய ஒளி வீசியது
இமயம் தாண்டி!
அதன் ஸ்பரிசத்தில்
சூத்திரராய், பஞ்சமராய்,
ஆண்டவன் பேராலேயே
அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த
இந்தியாவின் உழைக்கும் மக்கள்,
அந்தச் சுடரொளி பார்க்கத்
தலைநிமிர்த்தினர்!

சங்கறுத்த வெள்ளையனின்
கைகளை இறுகப் பிடித்து
சங்கம் வைத்தனர்.
1920 அக்டோபர் 31ல்
ஏஐடியுசி பிறந்தது.
சூரிய ஒளியே உடலில் படாமல்,
நாளோ கிழமையோ
கணக்கில் இல்லாமல்,
ஆண்டுக் கணக்கில்
அடிமையாய் உழைத்தும்
அவல நிலையிலேயே உழன்ற
தொழிலாளியின் முடக்கிய கரங்கள்
கொடி ஏந்த நீண்டன!

முறுக்கேறி, முட்டி மடக்கி
முழக்கங்கள் வெடித்தன
வேலைக்கோ, சம்பளத்துக்கோ,
உத்தரவாதம் இல்லை!

விபத்தில் இறந்தாலும்
தூக்கி வெளியே உடலை எறிந்து
எந்திரத்துக்கு என்ன நேர்ந்தது
என்றே பார்ப்பான்கள்!

முதலாளி விருப்பத்தில்,
ஏதோ ஒரு நாளில்
கங்காணி தரும் கூலியை
மடியேந்தி, துண்டேந்தி
வாங்கிய காலம்!

போனஸ், கிராஜுட்டி,
வீட்டு வாடகை, பஞ்சப்படி,
ஓய்வூதியம், இஎஸ்ஐ மருத்துவம்,
வருங்கால வைப்பு நிதி
என்பதெல்லாம் தொழிலாளி
கேட்டே அறியாத சொற்கள்..
சங்கம் வைப்பது ராஜத் துரோகம்,
சேர்ந்து பேசினால் சதி வழக்கு,
உள்ளாடைகள் உட்பட
சிவப்புச் சாயம் தோய்த்த
உடையை அணிந்திருந்தால்
சிறைச்சாலைகள் உள்ளிழுக்கும்!

எமது விடுதலை வேண்டும்!
எமது நாட்டிற்கு விடுதலை அதனினும்
விரைவில் வேண்டும் என
ஏஐடியுசி பிறந்த பின்தான்,
கனதனவான்கள் கையிலிருந்த
விடுதலைப் போர்
உழைப்போர் கையில் வந்தது,
பின்னர் உக்கிரமானது.

மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடந்தனர்,
நூலோர்கள் செக்கடியில்
நோவுதல் கண்டனர்.

விடுதலைப் போரிலும்,
தம் விடுதலைக்கான போராட்டங்களிலும்,
ஏஐடியுசி பதாகையை
ஏந்திப் பிடித்து
சமரங்கள் செய்தாரின்
சரித்திரங்களைத் தொகுத்தால்,
எத்தனை தொகுதிகள்
எழுதினும் போதாது.

கப்பற்படை எழுச்சியில்
இந்திய தொழிலாளியின்
ஏற்றமிகு பங்கு
ஒன்று போதாதா?!
நூறாண்டு தவமாய்
வேண்டிய விடுதலை
வந்தது 1947 ஆகஸ்ட் 15ல்!
வெள்ளைக்காரனை விரட்டிய பின்பு
பழுப்பு எஜமானர்கள்
ஆட்சி கட்டிலில்
அகலமாய் அமர்ந்தனர்.

எல்லோருக்கும் சுதந்திரம்
ஆனால்
வீறு கொண்டு போராடிய
உழைக்கின்ற வர்க்கத்திற்கு
விடுதலை கிடைக்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியின்
தொடர்ச்சியைப் போலவே
எல்லாக் கொடுமைகளும்
கொஞ்சம் கூடுதலாகவே..

சங்க அலுவலகங்களை
காவல் நாய்கள் கடித்துக் குதறின.
உரிமை கேட்டு முழங்கிய வீரனின் மொத்த
குடும்பமும்
சந்திக்கு இழுக்கப்பட்டது.

சிறைக்குள்ளே அடைத்து,
துப்பாக்கிச் சனியன்களால்
சரமாரியாகச் சுட்டு
கொத்துக்கொத்தாய் சாகடித்த
சேலத்து நிகழ்வு
ஹிட்லரின் கொடுமைக்குக்
குறைந்ததா என்ன?

விடுதலை கிடைப்பதற்கு
மூன்று மாதங்கள் முன்னாலேயே
ஏஐடியுசியைப் பிளந்து
ஐஎன்டியுசியை,
அடுத்து ஆள வருபவர்களே
உருவாக்கிவைத்தனர்.
அப்புறம் உரமேறி நின்ற
இந்தியத் தொழிலாளி
வண்ண வண்ணப் பதாகைகளின்|
கூட்டத்தில் தொலைந்து போனான்!

உலகமெல்லாம்
உழைப்பவர் உரிமைக்குத் தோன்றாத்
துணையாய்,
தேசங்களின் விடுதலைக்குப் பேராதரவாய்,
வலிமையாய் நின்ற
சோவியத் உள்ளிட்ட
சோஷலிஸ முகாம்
அறத்தினால் வீழ்ந்தது!

70 ஆண்டுகாலம்
தொழிலாளர் அடைந்த
உரிமைகளை எல்லாம்
பறித்துப் பிடுங்க
ரீகன் தாச்சர் ரகசிய திட்டம்
விஷப் புகையாய்
புவியை சூழ்ந்தது!

1991ல், நரசிம்மராவுகாரு,
டங்கல் எழுதிய
புதிய பொருளாதாரப் பாட்டை
மன்மோகன் சிங் மெட்டில்
விஸ்தாரமாய் பாடினார்!
விருப்ப ஓய்வு விரிவுபட்டது!

காண்ட்ராக்ட் முறைமை,
நிரந்தர தொழிலாளியை
முக்கால்வாசிக்கு மேல்
முழுங்கி விட்டது!

1982ல் தொடங்கி,
பல வண்ணச் சங்கங்களை
கோரிக்கைச் சங்கிலியில் இணைத்து
ஆட்சிக் கொள்கைகளுக்கு எதிராய்
ஒருங்கிணைந்த போராட்டம் தொடங்கியது.
இணைப்பு பாலமாய்
ஏஐடியுசி விளங்கியது.

காங்கிரஸ் குதிரை
தாம் நினைத்த வேகத்தில்
ஓடவில்லை என நினைத்த
கார்ப்பரேட் சக்திகள் ஒரு
குஜராத் குதிரையைக்
கண்டறிந்தன.

இந்திய மக்களை வெறுப்பரசியலால்,
வர்ணாசிரம விஷத்துக்கு
இந்து என இனிப்பு பூசி
சொந்தச் சகோதரர்களைத்
தமக்குள்ளே மோதவைத்து,
அந்த ரத்த நதியில்
மண்டை ஓடுகளில் கால் வைத்து
அரியணையில் ஏற முயன்ற
வகுப்புவாத ஆர்.எஸ்.எஸ்
கார்ப்பரேட்டுகளோடு
கைகோர்த்து
இருக்கிறது
ஆட்சியில்!

காங்கிரஸ் ஆட்சியாளர்கள்
மென்று விழுங்கிச் சொன்ன
மக்கள் விரோத, தொழிலாளர் விரோத
திட்டங்கள் அனைத்தையும்,
இதுதான் வளர்ச்சி என
இவர்கள் இறுமாப்பாய்
செயலாக்கி வருகிறார்கள்.
எதிர்த்தால் தேச விரோதி,
இந்து விரோதி, அர்பன் நக்சல்
இன்னும் என்னென்ன பெயர்கள்!

எல்லாம் தப்பு என்று
நன்றாக தெரிந்தாலும்
அதிகாரத்துக்குப் பயந்தும்,
பணத்தாசையால் பிறழ்ந்தும்
வாலாட்டும் ஊடகங்கள்!

வருமான வரி, அமலாக்கத்துறை.
தேசிய புலனாய்வு முகமை,
மத்திய புலனாய்வுத்துறை என
எத்தனை ஒடுக்கு கருவிகள்!
இதில் நீதிமன்றத்தைச் சேர்த்தால்
காராக்கிரகம் கிடைக்கலாம்!

வெள்ளப்பெருக்கு உடைக்கும் இடத்தில்,
ஒன்றாய் சேர்ந்து அணை கட்டாமல்,
வீட்டைச் சுற்றி அணை கட்டினால்,
வெள்ளம் உடைத்து நுழையாதா?

கருத்தால் கரத்தால் உழைத்தாலும்,
தொழில் எத்தன்மைத்தானது என்றாலும்
என்ன கருத்தியல் கொண்டாலும்,
எல்லாம் ஒருபுறம் ஏறக்கட்டி,
உழைக்கின்ற மக்களுக்கிடையே
விரிந்து பரந்ததாய் ஒற்றுமை தேவை!

பிறந்தநாள் தொட்டு,
ஒற்றுமை ஒன்றையே உயிர் முழக்கமாய்
ஒவ்வொரு நொடியும் உச்சரித்து வருகிற
ஏஐடியுசிக்கு
இந்த அக்டோபர் 31ல்
104 வது பிறந்தநாள்!
உழைப்பவர் வாழ,
உலகெலாம் வாழ,
ஏஐடியுசி நீடூழி வாழ்க!



Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.